# இனித்திட வந்தது
# எழிற் பொங்கல்

அல்லும் பகலும் உடல்கொண்டு
அயரா துழவர் உழைத்ததனுல்;
பல்வித மான தானியங்கள்
பாருல கோர்க்குத் தந்தார்கள்!
கொல்லும் வறுமை இன்ருேடு
குறைந்தே வழுவிச் சென்ருேட;
நல்வர வான தைப்பெண்ணுள்!
நல்கிய பொங்கல் தானின்றே!
புத்தம் புதிய செந்நெல்லும்;
பொலிந்தே ஓங்கும் சீர்தெங்கும்;
திக்திக் குந்தீங் கரும்புகளும்;
திருவளர் மஞ்சள் குருத்துகளும்;
சித்திர வாழைக் குலேபலவும்;
செழித்தே வயிலில் கொழித்திடவே;
இத்தரை வாழ்வில் இத்தினமே;
இனித்திட வந்தது எழிற்பொங்கல்.
கன்று காலிகள் உழைப்பிற்கும்;
கருவிக ளனைத்தின் உதவிக்கும்;
நின்று சுழலும் சூரியனுர்
நீர்மழை சொரிந்த சீர்மைக்கும்;
இன்று உழவோர் மனமாற
இருகை குவித்தே மண்மீது;
நன்றி கூறிட வரும்நாளே!
நலமுறும் பொங்கல் திருநாளே!

(திருப்புக)

உ
முருகா

# பொங்கல் வாழ்த்து !

"உலகம் உயர்ந்தோர் மாட்டே" என்பது பழமொழி. எனவே மானிடராய் பிறந்த ஒவ்வொருவரும் எண்ணத்தால் உயர்ந்து வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதனை நமது நாட்டின் தலைசிறந்த பொங்கல் விழா எடுத்துக் காட்டாகி விளங்குகிறது.

காலமெல்லாம் கழனியில் விழுந்து சேற்றில் புரண்டு, புழுதியடித்து, பயிராக்கிப் பாதுகாத்து, அறுவடை செய்து, பலன்காணும் நாள் தைப் பொங்கல் விழா ! இந்தப் பலனை விவசாயிகள் மட்டுமா அனுபவிக்கிறார்கள் ? இல்லை, தமிழகத்தில் வாழும் நாம் அனைவருமே பலன் காணும் நாள். எல்லாவித பிரச்சனைகளும் "தைபிறந்தால் வழி பிறக்கும்" என்று எதிர் பார்த்து தை பிறக்கும் போது, களஞ்சியம் குவியும்போது, நம்மனமும் பொங்கி எழுச்சியடைகிறது! இதனைத்தான் தமிழன் செயலாக்கி மகிழ்கின்றான்.

தமிழகம் எங்கணும் பூமணம் கமழ புத்தாடை உடுத்து, புத்தரிசி பொங்கி, கொத்து மஞ்சளும் செங்கரும்பும் வைத்து, பசுஞ் சாணத்தால் இரட்டைப் பிள்ளையார் பிடித்து, அருகம்புல் சாத்தி உற்றார் உறவினருடன், மனைவி மக்கள் பெண்டிர்களுடன் இறைவனை வழிபட்டு "பொங்கி எழுந்தேன் புதுப்பானைச் சோறேழுந்தேன்"என்று உள்ளம் கனிந்து எல்லோரும் இன்புற்றிருக்க எல்லாம் வல்ல இறையை மூலிகைமணி சார்பில் வாழ்த்துகிறோம்.

ஆசிரியர்,
மூலிகைமணி.

---

பொங்கு மின்பப் புதுநாளில்
பூரிப் போடு புவியோர்கள் ;
மங்கல வாழ்வு உண்டாகி
மாண்புக ளுற்று கொண்டாடி
எங்கும் கலந்து வாழ்ந்திடவே
இதயங் கனிந்தே வாழ்த்துகிறோம் ;
தங்கும் அழகுத் திருவேலன்
தயவா லனைத்தும் பெறுவோமே !

( மெக்கேல்பட்டி M. பிலவேந்திரன் )

# மூலிகைமணி மருத்துவ மாத இதழ்.

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்.

ஆ. இரா. கண்ணப்பர். *R. M. P. Regd*

ஆண்டு சந்தா: ரூ 5—00 :: தனிப்பிரதி: 50 காசு

ஆறு மாத சந்தா கிடையாது.


# தைப் பொங்கல் சிறப்பிதழில்


| | | | |
|---|---|---|---|
| 1. | இனித்திட வந்தது எழிற் பொங்கல்! | ... | 1 |
| 2. | பொங்கல் வாழ்த்து! | ... | 2 |
| 3. | கார்ட்டூன்! | ... | 4 |
| 4. | வழிகூட்டி அனுப்புங்கள்! (தலையங்கம்) | ... | 5 |
| 5. | நம்நாட்டு மூலிகைகள்! | ... | 7 |
| 6. | நோயும் மருந்தும்! | ... | 14 |
| 7, | சைவம்! | ... | 25 |
| 8. | மனித உறுப்புகளில் மூலிகைகளின் குணாதிசயங்கள்! | ... | 30 |
| 9. | அடங்காத இருமலுக்கு! | ... | 32 |
| 10. | இலட்சியவாதி! | ... | 33 |
| 11. | பிஞ்சிலே பழுத்தது! | ... | 36 |
| 12. | புல்லுருவி! | ... | 37 |
| 13. | சுவாசகாசம் நீங்க! | ... | 38 |
| 14. | கொக்கிப்புழு! | ... | 39 |
| 15. | பயனுள்ள சில குறிப்புகள்! | ... | 41 |
| 16. | பல்சொத்தைக்குக் காரணம்! | ... | 43 |
| 17. | விஷஜந்துக்களும் மூலிகைகளும்! | ... | 45 |
| 18. | கௌமாரம்! | ... | 49 |
| 19. | தேனும் விளையாட்டுப் போட்டியும்! | ... | 51 |
| 20. | இதய ஒலி! | ... | 52 |
| 21. | நவகோள்களின் முன்னறிக்கை! | ... | 55 |



போன் நெம்பர் 726 : : தபால் பெட்டி 26

அலுவலகம்: 33-1, தென்னமரம் தெரு, வேலூர். (வ. ஆ)



மூலிகைமணியில் வெளியாகும் கட்டுரைகள் பதிப்பகத்திற்கே உரியது. ஆசிரியர் உரிமையின்றி யாரும் பயன்படுத்தக்கூடாது. கதையில் வரும் பெயர்கள் கற்பனையே; யாரையும் குறிப்பிடுவதல்ல.


கார்ட்டூன்
இந்தியநண்பா! எதோ கைகொடு! நாமிருவரும் நண்பர்கள் அல்லவா?
ஆங்கில வைத்தியம்
போதும்! உங்கள் கூட்டுறவால்எமது நாடே நோயாளிகளாகி விட்டது சென்றுவிடுங்கள்
நாட்டு வைத்தியம்
நவீன மருத்துவமே நீசென்றுவிடு!

உ

முருகா.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே

# மூலிகை மணி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே. தாயுமானவர்

மலர் 2] விசுவாசுஸு தைமீ (ஜனவரி 66) [இதழ் 3

## "வழிகூட்டி அனுப்புங்கள்"

நவீன ஆங்கில மருத்துவம் வளர வளர நாடும நாட்டு மக்களும் நலிவுற்றது என்பதை எடுத்துச் சொல்லாமலே பலப்பல நிகழ்ச்சிகள் நமக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. "டாக்டர் ஊசி போட்டார் உடனே அந்த இடத்திலேயே மயங்கி விழுந்து விட்டார்," என்றும் 'உடல் பலத்திற்காக டானிக் மாத்திரைகளைச் சாப்பிட்டேன் உடம்பெல்லாம் நமைச்சலும், சொறியும் கிளப்பி விட்டன'! என்ற செய்திகளும். 'தலைவலிக்கு மாத்திரைகளை விழுங்கினேன். இப்போது இருதயத்தில் வலி எடுக்கிறது'. என்று நாட்டு மருத்துவர்களிடம் வரும் நோயாளிகளும், சர்வ சாதாரணமாகி வருகிறது! இவர்கள் சும்மாவா வருகிறார்கள்? எத்தனை யெத்தனை ஊசி மருந்துகளை உடம்பில் பொத்தல் செய்து ஏற்றிக்கொண்டது! இவ்வளவு சிகிச்சைக்குப்

பின்னும் நோய் தீராமல், ''உடம்பு வேண்டாம் என் கைவிட்டால்போதும்'' என்றபடி வீடு நிலபுலன்கள், நகை நட்டுக்களை எலலாம் விற்றுப்போட்டு எக்ஸ்ரே, ரேடியம், பாதாலஜி, மைனர் ஆப்ரேஷன், மேஜர் ஆப்ரேஷன் யூரின், ஸ்பூட்டம், பிலட், ஸ்டூல் இன்னும் உடம்பில் என்னவெல்லாம் இருக்கிறதோ அதையெல்லாம் டெஸ்டு செய்து விட்டு, ஒருபடி ரத்தம் உழக்கு ரத்தமாகி,ஆள் எலும்பும் தோலும் ஆக,விட்டால் போதும் என்று நாட்டு வைத்தியர்களிடம் வந்து மோதுகிறார்கள். அந்த நோயாளி வந்து மோதிய வேகத்தில் அவனே கீழே விழுந்து இறந்தால் கூட பழி நாட்டு வைத்தியர்கள் பேரிலே சுமத்தப்படுகிறது,

இப்போதெல்லாம் நகரவாழ் மக்களுக்கு ஆங்கில வைத்தியத்தில் பட்டு, பட்டு தலை மொட்டையாகி வெறுப்பாகி விட்டது. வர வர நாட்டு வைத்தியர்கள் எங்கே? என்று தேடிப்போக ஆரம்பித்து இருக்கிறார்கள். அதோடு பச்சிலைகளைக்கொண்டு வரும் கிராம மக்களிடம் மூலிகைகளின் நற்பயன்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறார்கள் என்ற வதந்திகளைக் கேட்டு மூலிகை மணி மிக்க மகிழ்ச்சியடைகிறது. அத்துடன் மற்றொரு கவலையான செய்தியைக் கேட்டும் வேதனை படுகிறது. அதாவது நவீன ஆங்கில மருத்துவத்தின் தன்மை தெரியாத அபபாவி கிராம மக்கள் ஊசி மாத்திரை, டானிக்குகளின் பேரில் மோகம் கொண்டு நகர்புற நவீன ஆஸ்பத்திரிகளில் வந்து படுத்துக்கொண்டு ஸ்பெஷல் பெட் அது, இது என்று பணத்தை வாரி இறைத்து விட்டு, நோயாளியைப் பார்க்க வரும் உற்றார் உறவினர்களுக்கும், ஹோட்டல்களில் ருசியான பலகாரம், திரைப் படம், நாடகம் போன்ற வைகளுக்கும் செலவழித்துப் பிறகு, கிராமத்தில் உழுவதற்கு ஒரு சாண் நிலமும் போய் நிர்கதியாகி விடுகிறார்கள். இந்த நிலை மாறி விவசாயப் பெருங்குடி மக்கள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தால் உற்பத்திப்பெருகும். நாடு வளம் பெறும். எனவே பணச்சிலவு மிகுந்த அன்னிய மருத்துவத் துறையைப் படிப்படியாகக் குறைத்து. நமது நாட்டு வைத்தியத்திற்கு குறிப்பாக சித்த மருத்துவத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து நாட்டு மருத்துவ வளர்ச்சிக்கான பட்டப்படிப்பும் பட்டி தொட்டி களிலெல்லாம் சித்த வைத்தியசாலைகளை நிறைய திறந்து பசுமையான மூலிகைகளைக் கொண்டு எளிய சிகிச்சை மூலம் நிரந்தர குணம் கிடைக்கச் செய்யவேண்டும். இறுதியாக ஒருசில குறிபபிட்ட காலத்துக்குள் அன்னிய மருத்துவத்தை ''வெள்ளைக்காரனை வழிகூட்டி அனுப்பியது போல'' செய்தல் வேண்டும். இந்த எண்ணம் நிறைவுபெற எல்லாம் வல்ல பவரோக வைத்தியநாதன் எல்லோர்உள்ளத்திலும்(அரசிய லிலும் பதவிகளிலும் உள்ளவர்கள் இதயத்திலும்) புகுந்து செயல்பட மூலிகை மணி பிரார்த்தனை செய்து கொள்ளுகிறது. (சுபம்)

# நம் நாட்டு மூலிகைகள்

## காக்கணம் கொடி

### 77-வது கட்டுரை.

கொடி வகையில் உத்தாமணி, கட்டுக்கொடி கோவைக்கொடி பிரண்டை, முசுமுசுக்கை, ஆகியவைகளைப் பற்றி முன் கட்டுரைகளில் தெரிந்துக்கொண்ட நீங்கள், இந்த காக்கணம் கொடியைப்பற்றித் தெரிந்து வைத்தல் அவசியத்திலும் அவசியமாகும். ஏனெனில் இந்த காக்கணம் கொடி மேலே கூறப்பட்ட கொடி வகைகள் போலவேஎங்கும் எளிதாகவும் கிடைக்கக் கூடியது. சுலபமாக பயிரிட்டும் வளர்க்கலாம்.

சில பூங்கா தோட்டங்கள், வள மனைகளின் (BUNGALO W) தோட்டங்கள் ஆகிய இடங்களில், இந்த பூவை அழகுக்கு வளர்ப்பதும் உண்டு. எனவே இக்கொடியை எளிதாக அனைவரும் தெரிந்துக் கொள்ளலாம். கிராமப் புரங்களில் தோட்டம், துறவு, முள்வேலியோரங் களில் இந்த காக்கணம் கொடி தன்னிச்சையாகவே வளர்ந்து விடுகின்றது.

பொதுவாக இதன் வழக்குப் பெயர்: காக்கட்டான் காக்கணங் கொடி, காக்கணத்தி என்றும் சில பகுதிகளில் சங்கு புஷ்பம் என்றும் கூட் சொல்வதுண்டு. இதன் மெல்லிய கொடிக்காம்பு தந்திக்கம்பி போன்று சுருண்டு ஒன்றைப்பற்றி இடதுபுறமாக சுற்றிக்கொண்டு மேலே படரும். பற்றுக்கோடு இல்லாத இடங்களில் கொடிகள் அடர்த்தியாக குத்துச் செடிபோல் மேல்நோக்கி பரவும். இதன் இலைகள் சுமார் ஒரு

மேசைகரண்டி அளவுவிட்டு கொடிக்காம்பிலிருந்து(படத்தில் காட்டியபடி) நேருக்கு நேராக ஜதை இலைகள் இரண்டு நான்கு ஆக விட்டு இலைக்காம்பு முனையில் ஒரே இலை இருக்கும். ஆக ஒரு காம்பிற்கு மூவிலை. ஐந்திலை

குறிப்பு: நம்நாட்டு மூலிகை வரிசைத்தொடரை தினமணிச் சுடரில்தொடர்ந்து வாசித்து வந்த அன்பர்கள் கவனத்திற்கு. கடந்த 1962-ம்ஆண்டு முதல், வாரந்தோறும் தவருமல் வெளியிட்ட மூலிகைகள் நூற்றிற்கும் மேலாக இருக்கும். இடையிடையே, ஆராய்ச்சிகளுக்கு நேரத்தை ஒதுக்கிய காரணங்களால் சில வாரங்கள் தொடர்ந்ததை விட்டு மீண்டும் ஆரம்பித்து விஷய தானம் செய்து வரப்பட்டது. சில வாரம்ஒரே கட்டுரை (1) (2) (3) என்று, பூலோககற்பக விருட்சம், பூவரசன், புளிய மரம், புங்கமரம், வில்வம் போன்ற கட்டுரைகள் வெளியாகிபுள்ளது, ஆக இங்கனம் சுடரில் நான்கு ஆண்டுகளாக தூதுவளை முதலாக 26—9—65ல் கடைசியாக சீதேவிச் செங்கழுநீர் என்ற மூலிகையுடன் 73 தான் முடிவடைந்தது. கடந்த மாதம் மூலிகை மணியில் இடம்பெற்ற மாமரம் என்ற கட்டுரை ஏற்கனவே இரண்டுவாரமாக தினமணியில் வந்தவைதான். இம்மாத மூலிகைமணி முதல் நம்நாட்டு மூலிகைகளின் புதிய ஆராச்சிக் கட்டுரைகள் வரிசை நெம்பருடன் (தினமணி சுடரில் வெளியாகாதவைகள்) தொடர்ந்து வெளியாகும். நம்நாட்டு மூலிகைகள் மீண்டும் சுடரில் வெளிவர வில்லையே என்று ஏங்கிய அன்பர்கள் எல்லாம் மூலிகை மணிக்கு சந்தாதராகி விட்டால், நமது நாட்டின் அரும் பெரும் மருத்துவ உண்மைகளைத் தெரிந்து பணச் செலவு இன்றி ஆரோக்கிய வாழ்வு பெறலாம், ஏற்கனவே சந்தா அன்பர்களாகச் சேர்ந்தவர்கள் அவரவர் நண்பர் குழுவையும் சந்தா சேர்த்து, நமது டாக்டர் ஏ. ஆர். கண்ணப்பர் அவர்களுடைய எழுத்து தொண்டை பலப்படுத்தி மேன் மேலும் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம் மானேஜர்,

**மூலிகை மணி.**

களாக கொடிக்காம்பிலிருந்து இரண்டு முதல் நான்கு அங்குலத்திற்கு ஒரு இலைக்காம்பு விட்டு வளரும். இந்த இலைக்காம்பிற்கும் கொடிக்காம்பிற்கும் இடையே பூக்கள் அரும்பு விட்டு மலரும். இந்தப்பூவில் சங்குகளின் வாய்

உதடுகளில் வரிவரியாக இருப்பதுபோல இதழில் வரிகள், ஓலை விசிறி போன்று இருப்பதால் இதற்கு நமது முன்னோர்கள் சங்கு புஷ்பம் என்ற பெயர் வைத்தனர் போலும்! இந்த சங்கு புஷ்பம் பார்வைக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாக இருக்கும். இதைக் கையில் எடுத்துக் கொண்டு பார்க்க பூக்காம்பு பசுமை நிறமாகி, அதிலிருந்து மயில் தோகை விரித்து இருப்பது போன்ற ஒரே பெரிய இதழ் அகலமாகி இருக்கும் அதன் நடுவே (தமிகத்தின் தனிப்பெரும் தெய்வமாம் திரு முருகன் மயில் வாகனத்தில் அமர்ந்து இருப்பது போன்ற) ஒரு சிறுமொட்டு மயில் தன் தோகையின் நடுவே தலையை நீட்டி இருப்பது போல் காணும் இப்பூவை கையில் எடுப் போருக்கு மனதில் தெய்வீகப் பற்றும் பக்தி பரவசமும் உண்டாகும் என்பதில் ஐயமே இல்லை. பூக்கள் பூத்து இதழ் உதிர்ந்த பின்பு பிஞ் கள் நீண்டு வளரும் முதிர்ந்த நிலையில் இதன் காய்கள் சுமார் ந அங்குல நீளமாகி பார்வைக்கு. ஆவாரை அல்லது பீன்ஸ் பே விதை முற்றியஉடன் கருப்பாகி, காராமணியைப் போன்ற அ இருக்கும்,

இந்த காக்கணம் கொடியில் இரண்டு விதம் உண்டு. ஒன்றின சுத்த வெள்ளை நிறமாகியும் மற்றொன்று இதழ்களின் ஓரங்களில் எல்லாம் சுத்த நீல நிறமுடையதாகி சிறு மொட்டு அருகே செல்ல செல்ல நீலநிறம் குறைந்து வெண்மை நிறமுடையதாக காணும். இதனை வெண் சங்கு புஷ்பி மருஞ்சங்கு புஷ்பி என்றும் கூறுவர் அல்லது கருங்காக்கணம் வெண்காக்கணும் என்பார்கள்.

## உபயோகம்

பொதுமாக இதன் இலையும், வேரும், விதையும் மருத்துவப்பயனு டையதாகிறது. புஷ்பம் தெய்வவழிப் பாட்டிற்கு உகந்தது. குறிப்பாக சிவார்ச்சனைக்குரியது. குமாரக்கடவுளுக்கு பிரிய புஷ்பம் என்று பெரியோர்கள் கூறுவர் மருத்துவ குணத்தில் இருவித காக்கணமும் ஒரே செய்கை யுடையது.

## குணமும் பயனும்

இதன் வேர் விதை ஆகிய இரண்டும். மலத்தை இளக்கி நீராக்கி வெளித்தள்ளுவதில் குமரி, (சோற்றுக் கற்றாழை) ஆமணக்கு நெய் குப்பைமேனி, மூக்கிரட்டை போன்றவைகளுக்கு சமமானது. சிறுநீரை பெருக்கித்தள்ளுவதில், நெருஞ்சில் நர்யுருவி, கீழாநெல்லி ஆகியவைகளைப் போன்று வேலை செய்யும் உடல் உள்ளுறுப்புகளில் உண்டாகும், அழற்சி

களை நீக்குவதில் பிரண்டையைப்போன்று பயன்தரக் கூடியது. இலை உடல் உஷ்ணத்தை தணிக்கவல்லது, வீக்கங்களை கரைத்துவிடுவதில், உத்தாமணி, செம்பை, வாத நாராயணன் ஆகியவைகளுக்கு நிகரானது,

## ஜுரம் தலைவலிகட்கு

இதன் வேரை எடுத்து பச்சையாகவே 1 பலம் எடுத்து சிதைத்து 2 குவளை நீரில் போட்டு, 1 குவளையாகும்வரைக் காய்ச்சி, ஒரு முடக்கு வீதம் இரண்டு மணிக்கு ஒருதரம் தினம் ஆறுதடவை சாப்பிடஒரேநாளில் சுரம் தலைவலிகள் மற்றும் மலச்சிக்கலால் வந்த உஷ்ண வியாதிகள் தீரும். வேர் கிடைக்காத போது; காக்கணம் இலை, நுணா இலை, ஆடாதோடை இவைகளை சமமாக ஒருபிடி எடுத்து கஷாயமிட்டு முன்போல கொடுத்து ..ரலாம்,




## வெள்ளை பிரமேக ஒழுக்குகளுக்கு

காக்கணம் கொடி வேர், 1 பலம் எடுத்து அதை பாலில் வேக வைத்து, பால் விட்டு அறைத்து வேளை ஒன்றுக்கு சுண்டைக்காய் அளவு தினம் இரண்டுவேளை பால் அனுபானத்துடன் சாப்பிட்டு வர மேகரோக சம்மந்தப்பட்ட வெள்ளை ஒழுக்கு பிரமேகம், தந்திமேகம், மூத்திரதாரையின் அழற்சி எரிச்சல் யாவும் தீரும்.

## தீராத வெள்ளை ஒழுக்கு நிற்க

வெள்ளை காக்கணம்கொடி வேர், கட்டுக்கொடி இலை, கீழாநெல்லிச் செடி வேருடன், ஆனை நெருஞ்சில் இலை, அருகம்புல் ஆக ஆறு மூலிகையும் ஒருபிடி எடுத்து அதனுடன் 6 மிளகு சேர்த்து மைபோல அரைத்து ஒரு நெல்லிக்காய் அளவு, ஆழாக்கு கட்டி எருமைத்தயிரில் காலை, பகல், ஆக இரண்டுவேளைக் கொடுத்து புளி, காரம் நீக்கி பத்தியமிருக்க பல ஆண்டுகளாக போகும் வெள்ளை போக்கு, மேகரோக சம்மந்தபபட்டரணங்கள், கட்டிகள், அரையாப்பு, கொருக்கு, இத்தியாதி கொடும் வியாதிகளை ஒழித்துக்கட்டி விடும். மேலும் பென்சிலின், ஸ்டெப்டோமைசின் சல்பா ஆன்டிபயாடிக் ஊசி மாத்திரை மருந்துகளின் பின் விளைவுகளால் மேக ரோகங்கள் சிக்கலாகி பல தொல்லைகளை அனுபவித்தவர்களுக்கும் மேல் கண்ட சிகிச்சை நல்ல பயனளிக்க வல்லது இப்படி சிகிச்சை செய்து பூரண குணம் கண்டவர்கள் மீண்டும் மீண்டும் தப்புத் தண்டாக்களில் மாட்டிக்கொண்டு விடாமல் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

## கருங்காக்கணம் கொடி வேர்

இந்த வேரைப் பாலில் வேக வைத்து எடுத்துலர்த்தி இடித்து தூள் செய்துவைத்துக் கொண்டு வாத நோய்கள், வாய்வு வலி, சீளதம், வாத சீதளம், ஆகிய நோய்களுக்கும், மலக்கிருமிகளும் நீங்க இரண்டு சிட்டிக் கை வேர்தூளுடன் ஒரு சிட்டிகை சுக்கு தூளும் சேர்த்து வாயிலிட்டு வெந்நீர் குடித்துவர நீங்கும். குழந்தைகளுக்கு காணும் வாய்வு மந்தம் மலச்சிக்கல் இவைகளுக்கு 5 அரிசி எடை வேர் தூளும் சுக்குத்தூளும் கொடுக்க ஆபத்தினின்று இலகுவில் நோய் விலகும்.

## மலச்சிக்கலுக்கு விதை

பொதுவாக விதை நம் நாட்டு வழக்கில் இன்றும் உபயோகத்தில் இருந்து வருகிறது. வெள்ளை அல்லது கருங்காக்கணம் விதைகள் மாசி பங்குனி, சித்திரை மாதங்களில் தான் கிடைக்கும். இவைகளைச் சேர்த்து பொன்வருவலாக ஆமணக்குநெய் விட்டு வறுத்து இடித்து (வஸ்திரகாயம்) தூள் செய்து வைத்துக்கொள்வார்கள். அன்று பிறந்த குழந்தைகளுக்கும் கூட, வாரம் இருமுறை நோய் வராவிட்டாலும் கூட,இரண்டுஅரிசி எடை முதல் 5, 10, அரிசி எடை வயதுக்குத் தக்கபடி வெந்நீர் கலந்து கொடுப் பார்கள். காக்கணம் விதை குழந்தைகளை ஆமணக்கு நெய்போல காப்பாற்றக்கூடிய நிகரற்ற மருந்து.குழந்தைவியாதிகளுக்கென்றே. இறைவன் அருளால் படைக்கப்பட்ட நுணா, நொச்சி,பொடுதலை, மூக்கிரட்டை, குப்பைமேனி, கற்ருழை, ஆமணக்கு போன்றவை போல் இந்தகாக்கணம்

கொடியும் சிறப்பு வாய்ந்தது. குறிப்பாக வாய்வு, வாத சீதளங்களால் மலச்சிக்கலும் கபமும் உண்டாகி, சுரம் அடித்து இழுப்பு மூர்ச்சை, நரம்பு இழுப்பு வலிகள் வரும் குழந்தைகளுக்கு கை கண்டமருந்து. கிராம புறங்களில் பிரசவ மருத்துவம் பார்க்கும் மருத்துவச்சி (VILLAGE NURSES) களிடம் இந்த காக்கணம் சூர்ணம் மாத்திரைகள் அவசியம் இருந்தே தீரும்.

## யானைக்கால் வீக்கத்திற்கு

காக்கணம் விதை தூள் 2 தோலா இந்துப்பு இரண்டு தோலா, மாவு சுக்கு $\frac{1}{2}$ தோலா இவைகளை தனித் தனியாக இடித்துத் தூள் செய்து கலந்து வைத்துக்கொண்டு, தினம் 1க்கு ஒரு வேளை கால் தோலா சாப்பிட்டு வர மலம் நீராகி யானைக்கால் வீக்கம் சிறிது சிறியதாக கறைந்து வரும். மேலுக்கும் இதன இலைகளை எண்ணை விட்டு வதக்கி கட்டி வைத்துவர வீக்கத்தை அதிகமாக்காமல் குறைத்துவிடும்.

## இலை

காக்கணும் இலை வீக்கங்களையும் கட்டிகளையும் கரைத்து விடும் குணமுண்டு. குறிப்பாக இதை ரத்தக்கட்டிகள் சுரத்துடன் வரும் நெறிக் கட்டிகள் ஆகியவைகளுக்கு எண்ணையுடன் வதக்கிக்கட்டி வரலாம். மற்றும் இதன் இலைசாறு, தேன், இஞ்சிரசம் இவைகளை சமஅளவு எடுத்து கலந்து தேக்கரண்டி வீதம் உள்ளுக்குக் கொடுக்க பித்த உஷ்ணத்தால் வரும் வேர்வை இரவில் மழை காலத்திலும் காணும், வியர்வை நீங்கி உடல் சூடு தணியும்.

## பொன் கரையும் மூலிகை !

காக்கணம் இலை பொன்னைக் கரைத்து விடும், என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள் ! உண்மைதான். சித்த மருத்துவர்கள் தங்கத்தை நீற்று பற்பமாக்கி மருந்துகளைச் செய்ய காக்கணத்தியை நாடுவார்கள். பொன்னை நீற்று சாம்பலாக்குவதில் சிறப்புடையது காக்கணத்தி

காக்கணம் என்று ஏன் பெயரிட்டார்கள் என்பதைநாம் ஆராய்ந்து பார்ப்போமானால் சில உண்மைகள் நமக்குப் புலப்படும். கால் + கணம் — காக்கணம். கால் என்பது (காற்று) வாயுவைக் குறிக்கும், கணம் என்பது சூட்டை அதாவது அக்கினியை குறிக்கும். எனவே உடல்வாயு வாதம். ஆகியவைகளால் அக்கினி மந்தப்பட்டு சேரும் நோய்களைக் குறிக்கும் அடை மொழியாகவேஇதற்குகாக்கணம்கொடி என்று பெயரிட்டு இருக்கலாம்.

அகத்திய முனிவர் சில மூலிகைகளுக்கு மா. என்ற எழுத்தை முன்வைத்துப் பட்டப்பெயர் கொடுத்துள்ளார். மாமூலி என்று இந்த காக்கணம் கொடி அழைக்கிருர். மற்றும் முசுமுசுக்கை, திப்பிலி போன்ற வைகளுக்கும் இந்த பெயருண்டு. அவர் பாட்டை கவனியுங்கள்.

''மாதரால் வந்த வெட்டை வன்மேகஞ் சென்னி வலி
ஓது சுரம் விழிநோய் யோடுங்கான்—பேதியொடு
மாக்கட்டாஞ் சீதமறு மாமூலியாம் வெள்ளைக்
காக்கட்டான் வேரைக் காண்.

''மாஞ்சங் கிருமியடல் வாதங் கப இனமுஞ்
சேர்ந்த மலக்கட்டுஞ் சிதையுங் காண்—சூழ்ந்த
அருங்காக் குவூடு களிலண்டா மயிலே!
கருங் காக்கட்டான் விதையைக் கண்டு. (கு.மு)

## விழி நோய்களுக்கு

கண்ட படலம், மங்கல், நீர் அருகல், பார்வை கோளாறு, கண்வலி ஆகியவைகளுக்கு பல ஆங்கில மருந்துகளைப்போட்டு கண்களை கெடுத்துக் கொள்ளாமல் காக்கணம் இலையை மைபோல் அரைத்து அதை இரவில் நெற்றியின் மேல் பற்று போட்டுக் கொண்டுவர கண் ரோக சம்மந்தமான நோய்கள் விலகும். கண்களில் போட வேண்டாம். குணம் தெரிந்தவர் மற்றவருக்கும் சொல்லிவையுங்கள் காக்கணம் கொடியை.

**[ அடுத்த இதழில் 'மந்தாரை' வெளியாகும் ]**

---

வேலூர் டாக்டர். A. R. கண்ணப்பரின்

# " நம் நாட்டு மூலிகைகள் "

## முதல் தொகுதி

தினமணி சுடரில் தொடர்ந்து வந்த அரிய உயரிய மூலிகை ஆராய்ச்சி கட்டுரைகள் விரிவாகவும் விளக்கத்தோடும் கூடியது. பக்கங்கள் தோறும் படங்கள், பண்டைய மருத்துவ ஆய்வுகள், நோய்தீர்க்கும் பயன்கள், ஒவ்வொருபக்கமும் வைத்திய களஞ்சியம். நெடு நாளைய ஆராய்ச்சியின் உழைப்பு புதையல்! அழகிய இனிய உரைநடை மொழியில் மருத்துவத்தை வாழ்வோடு இணைக்கும் பாலம் போன்ற நூல். ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய இயற்கை மருத்துவக் கண்ணாடி.

**திருத்திய புத்தக பதிப்பு தபால் சிலவுடன் 3-10 M. O: அனுப்பு வோருக்கு தபால் மூலம் கிடைக்கும்.**

P. B. 26 மூலிகை மணி காரியாலயம். போன்: 726

33/1, தென்னமரம் தெருவு வேலூர், (வ. ஆ.)




[ இந்தப் பகுதியில் வாசக அன்பர்கள் தங்களின் வினக்களை தாராளமாக எழுதியனுப்பலாம். கூடுமான வரை பலருக்கும் பயன்தரும் கேள்விகளே முதலிடம் பெறும். ரகசிய கேள்விகளை குறிப்பிடும் அன்பர்கள் பெயரைக் குறிப்பிட மாட்டாது. கேள்விகளை எழுதும்போது தெளிவாகவும் முழு விலாசமும் வயதும் குறிப்பிட வேண்டும். ]

கேள்வி - ஐயா, ''சனி நீராடு'' என்பது ஔவைப் பழமொழி. ஏன் மற்றய தினங்களில் நீராடக் கூடாதா? தயவு செய்து விளக்கம் தாருங்கள்.

பதில் - நீங்கள் கொண்ட பொருள் விளக்கம்தவறு. சனி நீராடு என்பது சனிக் கிழமைகளில் எண்ணெய் ஸ்னனம் செய்து கொள்ள வேண்டும் என்று பொருளல்ல. சனிநீர் = ஆடு— ஓடிக் கொண்டே இருக்கும் நீரில் குளித்திடு என்பது பொருள். அதாவது நீர் வீழ்ச்சி, நீரோடை, ஆற்றுநீர் ஆகியவைகளில் நாள்தோறும் குளித்திட வேண்டும். இதனுல் உடல் ஆரோக்கியமும் மனத்தூய்மையும் வளர்ந்திடும். இதுவே உண்மைப் பொருள் விளக்கம்.

கே - நான் 11-ம் வகுப்பு படித்துவருகிறேன். பேசும்போது வாய் திக்கல் உண்டாகிறது. இது பிறந்து 8 வயது பூர்த்தியாகும்வரை இல்லை 9 வது வயதிலிருந்து உண்டானது. திக்குவாயால் பேசவும் சரளமாகப்

படிக்கவும் முடிவதில்லை. மேலும் ஞாபக சக்தி குறைவாக உள்ளது. அன்புடன் இதற்குத்தக்க உதவிகளைச் செய்து ஆதரிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

பி. சங்கரன், 4. சந்திவீரப்பன் கோவில்தெரு.
மலைக்கோட்டை, திருச்சி-2.

ப - அன்புள்ள தம்பி, கவலைப்பட வேண்டாம். பிறக்கும் போதே இல்லாத திக்குவாய் விலகிவிடும். தேவதைகளின் தோஷமாக இருக்கக்கூடும். அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு விநாயகர் பூசை தவருமல் செய்து வருவாய். பிறகு காலை வெறும் வயிற்றில் ஒரு ரூபாய் எடை தேனை வலது உள்ளங்கையில் விட்டு நக்கி சுவைத்து வரவேண்டும். எண்ணெய் வஸ்துக்களை நீக்கி ஞாபகசக்தி உண்டாக தூதுவளை துவையல் நாள்தோறும் 1 மண்டலம் பகல் உணவில் உருக்கிய நெய் யுடன் சாப்பிடு. முருகா என்ற உச்சரிப்பு திக்குவாய் போக்கும். முருகா முருகா, முருகா என மனதில் சதா காலமும் நினைந்து, அதை காலை பூஜைவேளையிலும் மாலையில் குறிப்பிட்ட நேரத்திலும் சில நிமிடம் வாயால் உச்சரித்து வந்தால் இடையில் வந்த திக்குவாய் ஒழிந்துபோகும் இத்துடன் உனக்கு முருகன் அபிஷேக விபூதிப் பிரசாதமும் வைத்து அனுப்பி இருக்கிறோம். நாள் தோறும் அதில் கடுகளவு நீரில் கரைத்து உள்ளுக்கும் பருகி பக்தியோடு அணிந்து கொள்.

கே - எனக்கு வயது 28. திருமணமாகி 13 வருடங்கள் ஆகிறது பெண்; இதுவரையில் குழந்தை பேறு இல்லை. சுமார் 6 வருடங்களாக இரண்டு மார்பகங்களும் வீங்கிக்கொண்டு வலிக்கிறது; மாலையில் சுரம் வருகிறது. விலக்கு ஆனபிறகு 10 நாட்கள் சுரமும் வலியும் இல்லை. மார்பகத்தில் பால் வருவது போல ஆனால் நீர்போல கசிகின்றது. 10 நாள் கழிந்த பின்னர் சுரமும் வலியும் வருகிறது. வேதனை தாங்க முடியவில்லை அங்கு நேரில் வரவும் வசதி இல்லை. எனவே தாங்கள் எனக்கு இதைப் போக்க வழிகூறுங்கள்.

ப - சகோதரி, உனது நோய் விவரம் நன்கு பரிசீலிக்கப் பட்டது. ஒன்று உன் கணவர் திருவிளையாடல் செய்தவரானால் மேக வாதம் உமது உடம்பிலும் தொற்றி விளையாடுகிறது எனலாம், இரண்டாவது அப்படி இல்லையானால், வாத நீர் பரம்பரையில் பிறந்த

உடம்பாக இருக்கக் கூடும். எனவே இதை நேரில்தான் கை நாடிப் பார்த்து தகுந்த மருந்தை மண்டலக் கணக்கில் உட்கொள்ள வேண்டும். பிரபலமான கைநாடி பார்க்கும் ஒரு நாட்டுவைத்தியரை அங்கேயே யாரிடமாவது கேட்டுத் தெரிந்து அவரிடமே சிகிச்சை செய்துகொள். இம்மாதிரியான நாள்பட்ட நோய்களுக்கு ஆளை நேரில் பார்க்காமல் சிகிச்சை செய்வதும் அல்லது கண்ட கண்ட ஊசிமருந்துகளைச் சாப்பிடுவதும் ஆபத்தில் முடியும். உணவில் ஓதமான காய்,வாய்வு, பண்டங்களை நீக்கிவிடவும். உமது கணவர் உடம்பையும் கவனித்தல் அவசியம்.

கே- 'மறைவிடத்தில் இரு விதைகளில் வலதுபக்கம் உள்ளது பெரியதாகி போன வருஷம் ஆபரேஷன் செய்து கொண்டேன். ஒரு வருஷம் ஆகியும் அப்படியே இருக்கிறது. சிலசமயம் வலிக்கிறது. எனக்கு வயது 24. பெண்சேர்க்கை கிடையாது. வலியைப் போக்கவும் வீக்கத்தைக் கரைக்கத்தக்க மருந்தை சொல்வீர்களானல் ஆயுள் காலம் வரை மறக்கமாட்டேன்.

ப- அப்பாடா! ஆயுள் காலம் வரை மறக்காது இருக்கும் வைத்தியமா? நாட்டு வைத்தியம்? விதை ஆபரேஷன் செய்து எடுத்து விட்டார்களே! அவர்களை அல்லவா நீர் அடிக்கடி அந்த உறுப்பைப் பார்க்கும் போதெல்லாம் மறக்காமல் நினைத்துக் கொள்வீர். நோய் போகாவிட்டாலும், அவர்கள் அறுத்துவிட்ட தழுமபு உமக்கு மறக்குமா? இதையே ஆரம்பத்தில் ஒரு நாட்டு வைத்தியரிடம் காண்பித்து, அறுக்காமல் தழைகளையும், வேர்களையும் கொண்டு வீக்கத்தை கறைத்து விட்டிருந்தால் ஆயுள் காலம் வரை மறக்காமல் இருப்பீரா! நம் நாட்டின் பழக்கம் தெரியுமா? ஒருவர் நோயுற்ற போது வைத்தியரை கடவுளுக்கு சமமாக போற்றுவார். பாதி குணமடைந்ததும் ஒரு நண்பனுக்குச் சமமாக பாவிப்பர். நோய் முற்றும் தீர்ந்துவிட்டாலோ, பரம எதிரிக்குச் சமமாக நினைப்பார்! இதை ஒரு சித்தன் பாட்டாகவே பாடியுள்ளான். இந்த ரகசியத்தை அறிந்த ஆங்கில டாக்டர்கள் (நோயைப் பூரணமாக ஒழித்துக்கட்டிவிட்டால் நோயாளி நம்மை எதிரிபோல் நினைப்பான் என்று தான்) போனவுடன் நோயைத் தற்காலிகமாக குறைத்து அனுப்புகிறார்கள். அதுமாதிரி அல்லவா இருக்கிறது உம்முடைய கூற்று! வீக்கம்

கறைக்கும் மூலிகைகள்: கரிசலாங்கண்ணி, கருஞ்செம்பை, வாதநாரா யணன், முற்றிய தேங்காயைத் திருகிய பூ, கழற்சிக் கொடி, குண்டு மணிச் செடி, தொட்டால் சிணுங்கி, வேப்பிலை, புளி இலை, கௌதாரி இலை, இவைகளை ஏதாகிலுமொன்றை வதக்கிக் கட்டி (இரவில்) வரவும் உள்ளுக்கும் மருந்து உண்டு இதைக் காலம் இடம் நோக்கி பிரயோகம் செய்தல் சிறப்பு.

6 கே- எனக்கு வயது 19 ஆகிறது ஐந்து ஆறு வருடங்களாகவே என்னுடைய இரு காதுகளிலும் சீழ் வடிந்து வருகிறது. துர்நாற்றமுடைய தாகவும் இருக்கிறது. நானும் எவ்வளவோ இங்கிலிஷ் மருந்துகள் போட்டு வருகிறேன். ஒரு சிறிதும் நிற்கவில்லை. இதனால் ஆபீசில் வேலை செய்வது கஷ்டமாய் இருக்கிறது. சிறிய சப்தம் கேட்பதில்லை. நல்ல மருந்து ஒன்று எனக்கு சிபாரிசு செய்யுங்கள்.

ப: ஆங்கில மருந்துகளால் உமது காதுநோய் சீர்கேடு அடைந்து இருத்தல் கூடும். ஊமத்தன் இலைச்சாற்றை தேங்காய் எண்ணெயுடன் சம அளவு சேர்த்து காய்ச்சி சாறு சுண்ட எடுத்து வைத்துக்கொண்டு நாலு துளி, தினம் மூன்றுவேளை போட்டு வரவும் குணமாகிவிடும். இல்லை யானால், எமது பரம்பரை மகா மூலிகை எண்ணெயை பத்தியமுடன் 5 நாள் சாப்பிடுங்கள் மறுபடி வந்து தொல்லை கொடுக்காது.

கே - என் நண்பன் அவருடைய மைத்துனியைக் காதலித்து திருமணம் செய்து கொள்ளவிருந்தான். இடையே திடீரென இரண்டு வருடங்களுக்கு முன் அந்த பெண்ணுக்கு பெங்களூரில் அறுவை சிகிச்சை நடந்து ரணம் ஆறிவிட்டது. இதுவரை இவன் அவளைக்காதலித்தது பெற்றோர்களுக்குத் தெரியாது. பிறகு ஒரு வருடம் கழித்து மேஜர் ஆபரே ஷன் அதேஇடத்தில் நடந்தது ஆபரேஷன் நடக்குமுன் பெற்றோர்களிடம் கையொப்பம் வாங்கி வெற்றிகரமாக முடிந்து பிழைத்துவிட்டாள். இம் முறை டாக்டரின் ஆலோசனை என்னவெனில் "இந்த பெண் கன்னி யாகவே இருத்தல் வேண்டும்" என்பது. பிறகுதான் இருவருடைய எண்ணமும் இரு வீட்டாருக்கும் தெரியவந்தது. எனவே ஆபரேஷன் பெண் திருமணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. பிள்ளைக்கோ அந்த பெண் தவிர மற்ற பெண்களை திருமணம் செய்து கொள்ள விருப்ப மில்லை. நண்பனின் வாழ்க்கை மறுமலர்ச்சியடைய என்ன பரிகாரம் என்பதை தயவு செய்து ஆலோசனை தாருங்கள்,

ப - ஐயா, உமது ஆலோசனைக் கட்டணம் ரூ, மூன்றும் வந்து அதை முருகன் திருப்பணிக்கு சேர்த்து விட்டோம் மிக்க நன்றி. உமது கேள்வி தர்ம சங்கடமான விஷயம், ஆண் பெண் காதல் என்பதே கருத்து ஒருமித்த உடல் உறவு சம்மந்தப்பட்டது. இயற்கையின் சோதனை பெண்ணுக்கு தடைபோட்டு விட்டது. இரண்டாவது பெரிய ஆபரேஷனுக்குப் பிறகு திருமணம் வேண்டாமென ஆலோசனைக்கூறிய பிறகு திருமணம் கூடாதுதான். மீறி செய்தபின் சோக சம்பவம் நிகழ்ந்து விட்டால் இரு குடும்பத்தாருக்கும் மனவேதனைதான். தற்சமய துன்பம் அவர்கள் இருவருக்கு மட்டும்தான். எனவே உமது நண்பன் காதல் உண்மையானால் அந்தப் பெண்மேல் காதலை விட்டு, முருகனிடம் காதல் வளரவேண்டும். பெண்ணிடம் கருணையும் தாயன்பு மட்டும் செலுத்தலாம். அப்படி இந்த பிரம்மசாரியம் கடைப்பிடிக்க முடியாத வரானால், போலிக் கவுரவத்தை விட்டு, கச்சிதமாக ஒரு பெண்ணைப் பார்த்து வாழ்க்கையைத் தொடங்கச் செய்யுங்கள். எல்லாம் வல்ல இறையருட் சக்தி இனிதே செய்து இன்னல் தவிர்க்க பிரார்த்தனை செய்கிறோம்.

கே - 'இப்பவும் பேத்தி, 7வது படிக்கிருள். அவளுக்கு தலையில் எப்பொழுது பார்த்தாலும் பேன்கள் உண்டாகி, என்ன கை பக்குவம் செய்தாலும் போகாமல் புண் உண்டாகி, சீப்பு வைத்து வார முடியாமல் உபத்திரமாக இருக்கிறது. அவளுக்கு பிறந்தது முதல் ஒரு கண்ணில் கரு விழி இல்லை. ஒரு கண் பார்வைதான் அதற்கு என்ன செய்யலாம். நாங்கள் மூலிகை மணியில் உள்ள சில குறிப்புகளைச் செய்து நோய் குணம் கண்டுள்ளது. சிரமம் பாரர்மல் பதில் தரவும்.

ப - பிறவி கண்ணுக்கு நாம் கருவிழி எப்படி தரமுடியும். அப்படி தந்தாலும் ஆண்டவனுக்கு விருப்பமில்லாததை செய்தால் வேறுஏதாவது கோளாறுகள் நிகழக்கூடுமல்லவா ? ஒரு கண் பார்வையுடன் திருப்தி யடைவது சிறப்பு. தலைப்பேன் ஒழிய அரை வீசை சீக்காய், ஒரு பலம் வசம்பு, ஐந்து பலம் கஞ்சாங்கோரை, அல்லது நாய்த்துளசி இலை உலர்த்தியது ஆகியவைகளை சேர்த்து பொடி செய்து இந்த தூளை வாரம் இருமுறை தலைக்கு போட்டு கசக்கி வரவும். பேன்கள் யாவும் ஒழிந்து போகும்.

**கே - எனது வயது 23. படிக்கிறேன் இருமாதங்களாக சிறுநீரில் ஏதோ எண்ணைபோன்ற வஸ்து படிகிறது(வெள்ளையாக அமிலம்போன்று) காலையில் முதலில் போகும் சிறுநீரில் அதிகமாக போகிறது. இது ஏதாவது வியாதியாய் இருந்தால் மருந்தை தெரிவிக்கும்படி தாழ்மையுடன் வேண்டு கிறேன். சில சமயங்களில் கால் முட்டிகள் கணுக்கால் வலி ஏற்படுகிறது.**

ப - தம்பீ.........என்ன படிக்கிறாய்? ஐந்தாம் வேதமா.........!! திரைப்பட பாடங்களா.........!! காலேஜ் வாசமா ?.........தனி விடுதியா .........உனது நோயில் ஒரு பைசா திறந்து எழுதி இருக்கிறாய்! மற்ற வைகளை மறைத்து விட்டாய். அத்துடன் இது ஏதாவது வியாதியாஎன்று கேட்டு வைத்தாய்! உம்போன்ற மாணவர் கடிதம் எத்தனையாயிரம் வருகின்றன. நல்ல மருந்து ஒன்று கூறுகிறேன். பேசாமல் படிப்புக்கு முழுக்குபோட்டுவிடு. பெற்றோர்களிடம்சென்றுஉண்மையைமறைக்காமல் உடல் கெட்ட விதத்தை கூறி நல்ல நாட்டு வைத்தியரை நாடி சிகிச்சை செய்துக்கொள். அத்துடன் விட்டுவிடாதே. உடனடியாக ஒரு பெண்ணைத்தேடி கட்டச்சொல்லி, திருமணம் செய்து கொண்டு விடு. பிறகு புத்தி தன்னிலைக்கு வந்து பிழைக்க வழிதேடிக் கொள்வாய். இது தான் உன்போன்றவர்களுக்கு மருந்து தெரிந்ததா ?

**கே - ஐயா, சுண்ணாம்பு சத்துள்ள உணவு பொருள்கள் என்னென்ன ?**

ப - நெல்லிக்காய், கரிசாலை, அரைக்கீரை, முள்ளங்கி, பிரண்டை கொடி, வெங்காயம், உளுத்தம் பருப்பு, பாசிப்பயிறு, அன்னாசி, முருங் கைக்கீரை, வெண்டைக்காய், அம்மாம் பச்சரிசி, தூதுவளை, முசுமுசுக்கை.

**கே - அன்புடையீர்! இரவில் எந்தெந்த உணவுகளை விலக்குவது ?**

ப - மோர். தயிர், நெய், கீரையினங்கள் மாவு சத்து நிறைய உள்ளதும் எண்ணை வித்துக்களும் எளிதில் ஜீரணமாக முடியாத கொழுப்பு தினுசுகளும்.

**கே - ஒன்றிற்கு மேற்பட்ட கீரை வகைகளை ஒரே சமயத்தில் உணவில் சேர்த்துக் கொள்ளலாமா ?**

ப - அகத்திக்கீரை. சிறுகீரை, இவைகள் சேர்க்கும் நாளில் மற்றைய வகை விலக்குதல் நன்மை பயக்கும். மற்றைய நாட்களில் எல்லாம் ஒன்ருகச் சேர்த்த கலவாங்கீரை என்று விற்பார்களே, எனவே மேல் குறித்த இரண்டை தவிர, மற்றவைகளை கலந்தும் தனித்தும் உண்பதில் தனித்தும் குற்றமொன்றும் இல்லை.

**கே - சில சைவ உணவுப்பொருள்கள் ஒரே சமயத்தில் ஒன்ருேடொன்று கலந்து உண்ணுதல் கூடாதாமே ?**

ப - ஆமாம், இவை மாமிச உணவுகளுக்கு சமமானது என்று கருதப்படுவதால், இவைகளைப்பற்றி கடந்த ஆண்டு மூலிகை மணியில் கோவை திரு ஜி. டி. நாயுடு அவர்கள் விளக்கியுள்ளார். காணுங்கள்.

**கே - நோய்க்கிருமிகளை எதிர்க்கக்கூடிய கிருமி நாசினி உணவுப் பொருள்கள் யாவை ?**

ப - அகத்திக்கீரை, அன்னுச்சிப்பழம், சாணுக்கீரை, சுண்டை, நெய்ச்சட்டிக்கீரை, சீத்தாப்பழம், நல்வேளைக்கீரை, பப்பாளி, பாகல்காய் பெருங்காயம் மணலிக்கீரை, மாங்கொட்டைப் பருப்பு, வள்ளிக்கிழங்கு, மூக்கிரட்டைக்கீரை, சிறுகீரை.

**கே - நான் உங்களிடமிருந்து ஒரு உதவியைபெற விரும்புகிறேன். உங்களைத்தவிர வேறு எவரும் எனக்குத் தெரிந்த அளவு உதவி செய்பவர்கள் இல்லையென்றே கருதுகின்றேன். ஆகையால் தாங்கள் அவகாசம் இல்லையென்று சொல்லாமல் எனக்கு உதவி செய்யவேண்டும் என்று மன்ருடிக்கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு இப்பொழுது வயது 26 ஆகின்றது. ஏழு எட்டு வருடங்களுக்கு முன்பு அறியாமையால் தீயபழக்கத்துக்கு (பாழும் காதல் சினிமாக்களும், ஆபாச காதல் சஞ்சிகைகளும் குலுக்கி மினுக்கி நடந்து செல்லும் காலேஜ்மாணவிகள் பார்வையிலும்)என் மனதைக்கெடுத்துவிட்டன. இதை ஒருவரிடமும் சொல்லவில்லை எனக்கு வேறு யாரிடமும் நம்பிக்கை இல்லை. உங்களையே உறுதியாக நம்புகிறேன். இன்பத்துக்கென அளிக்கப்பட்ட அரிய பிறவியை பெறுதற்கரிய பெருவாழ்வை துன்பமாக்கிக் கொள்ளும் மனிதரை நினைத்தால் கண் கலங்குகின்றது தீயோருடைய சேர்க்கையால் தீய பழக்கத்துக்கு ஆளாகிவிட்டால், அதனுடைய பலனை அனுபவித்து ஆகவேண்டுமா ? ஆண்டவன் விதித்த**

இயற்கை முறைக்கு இடர் விளைத்த பாவம் வீண்போகாது. இருவர் சேர்க்கைக்கு என்று ஆண்டவனால் அமைக்கப்பட்ட உறுப்பில் ஒருவனே விளையாடிவிட்டேன்! இயற்கைத்தாயை மறந்து இறைவன் ஆணையை மீறி நடந்ததன் பலனை அனுபவித்துத்தான் தீரவேண்டுமா? உடல் மிகவும் மெலிந்து இருக்கின்றது. எந்த மருந்து சாப்பிட்டாலும் உடம்பு தேறுவது இல்லை. உறுப்புகள் சக்தியற்று இருக்கின்றன. சரியாக ஜீரணம் ஆவது இல்லை. எந்தவேலையும் செய்வதற்கு முடிவதில்லை. தயவுசெய்து உங்களுடைய பத்திரிக்கையில் இதைபோட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ப - அன்பரே? கவலை படுவதில் ஒருசற்றும் பயனில்லை செய்த தவற்றை உணர்ந்து, வேதனை பட்டு உள்ளம் நொந்ததே உமக்குப்பிராயசித்தமாகும். உமது உள்ளக்கிடக்கையை எல்லாம் எம்மிடம் கொட்டிவிட்டாய், கடந்த காலத்தை நினைவுக்கு கொண்டுவராமல் மறந்துவிடு முருகவேளை காலை மாலை குறிபபிட்ட நேரத்தில் கசிந்து உருகி வழிபாடு செய்துவா, இதை ஒருநாளும் மறவாதே. உனது எதிர்காலம் இருள் நீங்கி ஒளிமயமாகிவிடும். மருந்துகளை நம்பி வாழ்க்கை நடத்த வேண்டாம். தினசரி உணவில் முருங்கைக்கீரை, பூ, பிஞ்சு, தூதுவளை கீரை, பூ, காய், பழம், பசளைக்கீரை, அரைக்கீரை ஆகியவைகளை மாற்றி மாற்றி நெய்விட்டு சாப்பிட்டுவருவாய். தீய பழக்க வழக்கங்களை கொண்ட காதல் புத்தகம், திரைப்படம், நட்பு ஆகியவைகளை களைந்துவிடு. பெரியோர்கள் நட்பு பிறருக்கு நன்மை செய்தல் தரும சிந்தனை உபகாரம் இவைகள் நல்வழியைக் காட்டும். முருகன் திருவருள் துணை கொண்டு சில சக்திவாய்ந்த மூலிகைகளைக் கொண்டு செய்த ரக்ஷை ஒன்று உமக்கு அனுப்பிவைக்கிறோம் குறிப்பிட்ட நாளில் அதை அணிந்துக்கொள். அதன் மூலம் உமது வாழ்வு மறுமலர்ச்சிபெறும். படுக்கையறையில் சிறு தீபம் அணையாமல் இருக்கட்டும். பெரியோர் இடையே உறங்கு. உனது விஷயத்தை வெளியிடவேண்டாமென்று எழுதியிருக்கிறாய். உன் போன்ற இளைஞர்கள் இதைப்பார்த்து திருந்தட்டுமே! உன்பெயரைத்தான் மறைத்து விட்டோமே! கவலைபடாமல் திருந்தி நல்வழியை நாடு.

கே - எனது உறவினருக்கு (வயது 52) 5 வருடகாலமாக செந்நிற (வெள்ளை) வட்ட வடிவமாக நயாபைசா அளவில் உடலின் சில பாகங்களில் இருந்து வருகிறது. இதை சிலர் வெண்குஷ்டம் என்றும் துர்நீர் என்றும் கூறுகிறார்கள். ஆங்கில மருத்துவமும், பல ஆண்டுகள் செய்து பலனில்லை. மேலும் அவர் புகைப்பிடித்தலும், மதுபானம் அருந்துவதும் நீண்டநேரம் கண் விழிப்பதும், அடிக்கடி வெற்றிலை-பாக்கு உபயோகிப்பதும் பழக்கமுடையவர். தங்களின் ஆலோசனைப்படி நடப்பதற்கு பெரிதும் கடமைப்பட்டவர்,

ப - புகை, மது' கண் விழிப்பு, இம்மூன்று போதுமே, ஆமாம்! மதுவிலக்கு காலத்தில் எப்படி மது ? ஒகோ லைசென்ஸ் குடியராக இருக்கலாம்! வயதும் 52 ஆகிவிட்டது! எமது ஆலோசனை யாதெனில் முதலில் இந்தப்பழக்கமெல்லாம் உடனடியாக நிறுத்தவேண்டும். ஆங்கில மருந்தும் உடலில் தீய விளைவுகளை உண்டாக்கியிருக்கக்கூடும். எனவேமருந்தின்றி மேற்கூறிய தீயபழக்கங்கள் ஏதுமின்றி சுமார்3மாதம் எண்ணை வஸ்துக்களை ஆகாரமாக கொள்ளாமல் இருந்து பின்பு இங்கு நேரில் வரவேண்டும். முதலில் தீய பழக்கத்தை விடுவாரா ? அதைக் கேளுங்கள்.

கே - தங்கள் பரம்பரை தயாரிப்பான மஹாமூலிகை எண்ணையை மூன்று தடவை சாப்பிட்டு என்னுடைய சர்ம ரோகத்தை முற்றும் குணமாக்கிக் கொண்டேன். 15 ஆண்டுகளாக பல மருந்துகளாலும் சிகிச்சையாலும் குணமாகாமல் இருந்து தங்கள் பரம்பரை எண்ணைக்கு விளம்பரம் என்பதே இல்லை. மூலிகை மணியிலேயே கூட இது பற்றி விளம்பரம் இல்லாதது மிகவும் வருந்தத்தக்கது. எத்தனையோ பயனற்ற போலி விளம்பரங்களால் ஏமாற்றமடைந்து இருக்கும் என்போன்ற நோயாளிகளுக்கு மஹாமூலிகை எண்ணை நல்ல பயன் தரும். இனியாவது உங்கள் பத்திரிகையில் தனி விளம்பரம் போடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

ப - ஐயா, இப்போது நீங்கள் மனம் திறந்து குணமான விஷயத்தை சொன்னீரே! அதுதான் உண்மையான விளம்பரம். நமது நாட்டு பரம்பரை வைத்தியர்களுக்கு விளம்பரம் எது தெரியுமா? உம்மைப் போன்ற குணமான ஆட்கள்தான்! இதுவே சில சமயம் தயாரிக்கும் மருந்து தீர்ந்து விடுகிறது. நாட்டு வைத்தியர்களில் பரம்பரை வழி.

வந்தவர்கள் பணம் நிறைய சேர்க்கவேண்டுமென்று வியாபார நோக்கத்துடன் தயாரிக்கமாட்டார்கள். தன்னிடம் வந்தவரை மட்டும் இறைவன் கட்டளை என மதித்து மருந்து கொடுப்பார்கள், ஊர்ஊராக முகாம போட்டு தன்னை விளம்பரம் படுத்திக்கொண்டும் போக மாட்டார்கள். நோயாளி நம்பிக்கையுடன் எந்த வைத்தியரிடம் போனாலும் நோய் அனேகமாக குணமாகி விடும். ஒரு சிலருக்கு குணமாகாது போனால், ஊழ்வினை இன்றும் குறையுள்ளது என்பது பொருள். அதுபோல நீங்களும் வந்து நம்பிக்கையுடன் சாப்பிட்டதால் நோய் தீர்ந்தது. மேலும் விளம்பரம் செய்து மருந்துகளை விற்பனையாகச் செய்து விட்டால் மருந்துகளை நிறைய தயாரிக்கவேண்டும். பணம் நிறைய வரும். பணத்தைக் கண்டதும் மனிதனுக்கு திமிர் பிடிக்கும் மருந்துகளைக் கொஞ்சமாக செய்தபோது காட்டிய ஆர்வத்தையும், அக்கரையும், நிறைய செய்யும் போது காட்டமாட்டார்கள். நிறைய மருந்து செய்யும் போது ஆட்கள் வைக்க நேரிடும். ஆட்கள் செய்வதால் மருந்தும் தூய்மை கெடும். எனவே பரம்பரை வைத்தியர்கள் யார் ஒருவர் உண்மையாக மருத்துவம் செய்கிறாரோ ? அவர் இறைவனை ஒவ்வொருதடவையும் (மருந்து செய்யும்போதெல்லாம்) வழிபட்டு, பயபக்தியுடன் தானே செய்து பிறருக்கு நம்பிக்கையாகவும், தன்வரையில் ஜீவனம் செய்து வருபவர்கள். இந்த வழியில் வந்ததுதான் மஹாமூலிகை எண்ணையும். எனவே நோயுடைய அனைவருக்கும் எப்படி கிடைக்கும் ? இப்பொழுது கூறுங்கள் பரம்பரை வைத்தியத்திற்கு விளம்பரம் தேவையா என்று.

**கே - நான் தினந்தோறும் அருகம்புல்லை அரைத்து சிறிதளவு சாப்பிட்டு வருகிறேன். இந்தப்பழக்கம் தொடர்ந்து செய்தால் கெடுதி ஏதாவது உண்டாகுமா ?**

ப - நமது முன்னோர்கள் பழக்கத்திலே அருகம்புல்லை துவையலாகவும் செய்து இஞ்சி, கொத்தமல்லி முதலியவைகளோடு உணவுடன் பழக்கப் படுத்தி வந்துள்ளனர். எனவே கெடுதி என்பது இதில் கிடையாது. அருகம்புல்லைப்பற்றி நன்கு தெரிந்துக்கொள்ள விரும்பினால் நம்நாட்டு மூலிகைகள் முதல்பாகத்தை வாசித்து நற்பயன் பெறுங்கள்.

# மானம் காப்பீர்!

சித்தர்கள் தவத்தாலே கண்டெடுத்த
  சிறப்பான அருள்மிகுந்த மூலிகைகள்
எத்தனையோ இங்குண்டே! 'தீரா' தென்று
  'இங்கிலீஷ்' டாக்டர்கள் சொல்லி விட்ட
பித்தங்கள், ரோகங்கள், நோய்களெல்லாம்
  பறந்தோடி செல்கிறதே மூலிகையால்!
'சித்து'வேலை ஏதுமில்லை! 'இலையும் வேரும்'
  சக்திமிகு மூலிகைகள்! உணர்தல் வேண்டும்!

சுரமென்றால் நீள்ஊசி; வயிற்றிலே பொல்லா
  வலியென்றால் நீள்ஊசி; காலில் கையில்
அரிப்பென்றால் நீள்ஊசி; தலையில் கொஞ்சம்
  அடிப்பட்டால் நீள்ஊசி; ஊசி! ஊசி!
புரியாத ஊசிகளால் உடலைக் குத்திப்
  புண்ணாக்கும் மேனாட்டு மருத்துவங்கள்!
சிரிப்போடு எந்தவித நோயானாலும்
  சீராக்கும் தமிழ்நாட்டு மூலிகைகள்!

'நாடி'யினை அறிவாலே நாடி நாடி
  நம்நாட்டு மருத்துவர்கள் நோயைக் கண்டு
வேடிக்கைப் பலபேசி சிரித்துக் கொண்டே
  வேதனையைப் போக்கிடுவர்; உடலைக் காப்பர்!
தேடிடுவர் 'ஸ்டெதஸ்கோப்'பால் நோயை; அந்தத்
  தவமறியா டாக்டர்கள்! ஆனால் அந்தோ!
வாடிடுவர்! நோயவர்க்குப் புரிந்தால் தானே
  வழக்கம்போல் ஊசியினைக் குத்தச் சொல்வர்!

மூலிகையால் தீராத நோயே இல்லை!
  மூவுலகும் எதிர்த்தாலும் இதனைச் சொல்வேன்!
வேலியது நோய்க்கெல்லாம்! உணரவேண்டும்!
  வேண்டாத ஊசிக்குப் பணத்தைக் கொட்டிக்
கூலிக்கு மாரடிக்கும் மனிதர் போலக்
  கூப்பாடு போட்டுதினம் 'மேலை நாட்டு'
வலிவற்ற மருந்துவத்திற் கடிமை யாகி
  வாழாதீர்! இந்நாட்டின் மானம் காப்பீர்!

— விசாலன்

உ

முருகா.

# சைவம்

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

உலகம் பல விதம் என்பது பழமொழி. இதற்கு என்னபொருள்? உலகம் பல விதம் என்று பதச் சேதம் செய்து உலகம் பலவிதமாக இருக்கிறது என்று பொருள் செய்கின்றூர்கள். அது அத்துணைச் சிறந்த பொருளன்று. ஏன்? உலகம் ஒருவிதமாகத் தானே இருக்கிறது. மக்களைப்பெறுவது பெண்கள் தானே? உண்பதும் உறங்குவதும் ஒன்றுபோல் தானே? பலவிதம் இல்லையல்லவா?

உலகு அம்பல விதம் என்று பதஞ் சேதஞ் செய்தல் வேண்டும். அம்பலத்திலே இறைவன் ஆடுகிருன். உலகம் இனிது நடைபெறுகிறது.

கண்ணுடியில் தெரிகின்ற நிழலை அசைக்கும் பொருட்டு தான் அசைவது போல், அகில உலகங்களும் அசையும் பொருட்டு இறைவன் அசைகின்ருன்.

இவ்வாறு இறைவன் ஆடத் தொடங்கிய காலம் எது என்று ஆராய்வாருக்கு அறிவுரை கூறுவார் போல் சேக்கிழார் பெருமானுர்

''மாதொரு பாகம் நோக்கி மன்னுசிற் றம்ப லத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனுர்''

என்கின்றூர்.

இறைவனுடைய ஆனந்த கூத்துக்கு ஆரம்பமும் இல்லை; அந்தமும் இல்லை. அத்திரு நடனத்தால் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐம்பெருந் தொழில்களும் நடைபெறுகின்றன.

நம்முடைய இதய கமலத்திலேயுள்ள தகராகாயத்திலே ஒருஅசைவு நடைபெறுகின்றது. அதனால் இந்த உடம்பு அசைகின்றது. இதயத்தில் உள்ள அசைவு இல்லையானால், உடம்பு அசையாது. அசையாத இந்த உடம்பை நான்கு பேர் சேர்த்து அசைத்து விடுவார்கள்.

இவ்வாறு உயிர்கள்தோறும் நின்று அசைந்து அசைகின்ற பொருள் சிவம் எனப்படும், சிவம் இல்லையானால் சவம் எனப்படும்.

சிவம் என்பது மங்கலம் எனப்படும். சிவத்துடன் தொடர்புடையது சைவம்.

தில — எள். திலத்தின் தொடர்புடையது தைலம்.
சிலா— கல். சிலா வின் தொடர்புடையது சைலம்.
சிவ — மங்கலம். சிவ சம்மந்தமுடையது சைவம்.
இதை உணர்ந்தவன் சைவன்.

"நின்றநுவும் சிரிப்பதுவும் சைவப் பேயாய்"

என்பார் திருஞான சம்மந்தர்.

சிவம் பேரொளிப் பிழம்பாகத் திகழ்கின்றது. ஒளி மேல் நோக்குந் தன்மையது. அதனால் அக்கினி மேல் நோக்கி எரிகின்றது.

மேல் நோக்கித் திகழ்வது சிவ சோதி
அதைச் சூழ்ந்துள்ளது அருட் சோதி.
அது ஆன்ம சோதியில் தங்கியுள்ளது.

இந்த மூன்றும் ஒன்று சேர்ந்த ஒரு அருளமைப்பே சிவலிங்கம்.

சிவலிங்கத்தின் மேல் நோக்கிய வடிவம் சிவசோதி. அதனைச் சூழ்ந்து ஆன்மாவை நோக்கியுள்ள ஒன்று அருட்சோதி. அடியில் உள்ள வட்ட வடிவமான வடிவம் ஆன்மசோதி.

"சோதியுட் சோதியுட் சோதி"

என்று அருட்பிரகாச வள்ளலார் பாடுகின்றார்

உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே

என்பது திருமந்திரம்

பிரமன், திருமால், உருத்திரன், மகேச்சுவரன் இந்த நான்கும் உருவத் திரு மேனிகள்.

சிவம், சக்தி, நாதம், விந்து இந்த நான்கும் அருவத்திருமேனிகள். சதாசிவம் என்ற சிவலிங்கம் உருவாருவத் திரு மேனியாகும்.

இந்த,

"நலந்தரு பேதங் கொண்டு நடிப்பவன் நாதன் தானே"
என்று சிவஞான சித்தியார் கூறுகிறார். ஆதலால் சிவலிங்க வழிபாடு செய்வது இன்றியமையாதது. சிவலிங்கத்தை வழிபட்டோர் எல்லா நலன்களும் எளிதிற் பெறுவார்கள்.

சிவபூசைக்குச் சிறந்த சாதனங்கள், திருநீறு, உருத்திராட்சம், ஐந்தெழுத்து.

கருப்பு என்றால் யார்க்கும் வெறுப்பாக இருக்கும். வெண்மையான ஒரு பொருளை நெருப்பிலிட்டால் கரியாகிவிடும். கரிய சாணத்தை நெருப்பில் இட்டால் வெண்மையாகின்றது.

எனவே திருநீறு அணிந்தார் உள்ளம் வெண்மையாகப் பால்போல் மாசற்றுத்திகழும். திருநீற்றை முறைப்படி ஐந்தெழுத்தோதி யணிவாரை நோயும் பேயுந் தீண்டமாட்டா.

திருநீறு தரித்து சிவ பூசை செய்யாதார் ஏன் பிறந்தார்? என்று வினவுகின்றார், அதிவீர ராம பாண்டியர்.

சிவகருமஞ் செய்யார் திருநீறு சாத்தார்
தவநிலையாஞ் சைவநெறி சாரார் — அவனிதனில்
சான்பரந்த பச்சைக் களாநிழலைக் கைதொழார்
ஏன்பிறந்தார் மானிடராய் இன்று?

உமையம்மையார் காஞ்சி முதலிய திருத்தலங்களில் சிவலிங்க வழிபாடு செய்தார். விநாயகர் சிவபூசை செய்த தலம் திருச்செங்காட்டாங்குடி. முருகவேள் வழிபட்ட தலம் திருமுருகன் பூண்டி. திருமால் சிவபூசை செய்து சக்ராயுதம் பெற்றார், அத்தலம் திருவீழிமிழலை. பிரமா வழிபட்டதலம் பிரமபுரம். இந்திரன் வழிபட்டான் மதுரையில். முத்தரும், சித்தரும், முனிவரும் இமயவரும், இப்பூதலத்தில் வந்து சிவலிங்கத்திரு மேனியை அருச்சித்து அருள் பெற்றார்கள்.

மைந்தனாகிய அபிமன்யு மாண்ட அன்றிரவு கூட அருச்சுனன் சிவ பூசை செய்தான் என்று மகாபாரதம் கூறுகின்றது. இராமர் சிவ பூசை செய்தார். கிருஷ்ணர் சிவபூசை செய்து வழிபட்டார்; இராமேசுவரரும் சோமநாதரும் சான்று பகர்கின்றனர்.

ஐந்தெழுத்தை ஓதுவார் உள்ளத்தில் ஞானஒளி வீசும். ஓதர்தார் உள்ளம் மருண்டு இருண்டு பாழ்படும்.

......................................அரன்
அஞ்செழுத்தை உணரா அறிவிலோர்
நெஞ்சும் எள்ள இருண்டது நீண்டவான்''

என்கின்றார் சேக்கிழார் அடிகள்.

சிவா, சிவா என்பார் காலன் வயப்படார். பிராண வாயு வாசி எனப்படும். அது பன்னிரு அங்குலம் வெளிப் படுகின்றது. எட்டு அங்குலம்தான் உள்ளே புகுகின்றது. ஆதாயம் எட்டு; விரயம் பன்னிரண்டு.

வா சி. வா — எட்டு அங்குலம். சி — நான்கு அங்குலம். வாசி வந்து நான்கு அங்குலம் விரயமாகின்றது. பன்னிரு அங்குலமும் உள்ளே செல்ல வேண்டுமாயின் சிவா என்று செல்லும்.

''விட்ட எழுத்தை விடாத எழுத்தால்
கட்ட வல்லார் காலனைக் கட்ட வல்லாரே''

என்கின்றார் திருமூலர்.

விட்ட எழுத்து சிகாரம், விடாத எழுத்து உகர ஆகாரம். வாசி என்று வந்து, சிவா என்று திரும்புதல் வேண்டும்.

## ஐந்து உறுதிப் பொருள்கள்

கிருஷ்ணன் என்ற சொல்லுக்கு கரியவன் என்று பொருள் கூறுவர் பலர். அது சிறந்த பொருளாகாது.

கிருஷ் — தோண்டுவது. ஆகுபெயராக நிலத்தைக் குறிக்கின்றது.

ந — நலம்.

எனவே, கிருஷ் — நிலம்; ந — நலம். நிலத்துக்கு நலம் செய்கின்றவர் கிருஷ்ணர்.

துவாபரயுக முடிவிலே கிருஷ்ணவதாரம் நிகழ்ந்தது. கிருஷ்ணர் பூபாரந் தீர்த்து, பன்னிரு சோதிலிங்கங்களுள் ஒன்றான சோமநாதத்தை வழிபட்டு, மேற்கடலின் அருகில் இரண்ய நதிக் கரையில் ஒரு அரசமரத்தின் கீழ் சிவயோகத்து அமர்ந்தார். பகவான் வந்த வேலையை முடித்துக் கொண்டு புறப்படுகின்றார் என்பதை யறிந்த முனிவரர்கள், ஆன்றோர்கள் அனைவரும் திரண்டு, கிருஷ்ணரை வணங்கி ''எம்பெருமானே! நீர் இப்போது வைகுண்டம் போகின்றீர். இனிவரும் செம்மையில்லாத செம்மையான கலியுகத்தில் நாங்கள் எவ்வாறு உய்வு பெறுவோம்? நாங்கள் கடைத் தேறும் வழியாது? அருள் செய்யும்'' என்று வேண்டி நின்றார்கள்.

அப்போது முனிவர்களைப் பார்த்து, கிருஷ்ணமூர்த்தி தனது கடைசி உபதேசமாக கூறியருளினார்கள்.

"முனிவர்களே! நீங்கள் ஏன் அறிவில்லாதவர்களைப் போல் அல்லல் படுகின்றீர்கள்? கருணையுடன் பிறைமதியைத் தலையில் சூடிய சிவபெருமானுடைய பாதமலர் உண்டு; திருமஞ்சனம் புரிய குளிர்ந்த நீர் உண்டு; வேத இதயமாகிய திருவைந்தெழுத்துண்டு. ஐந்தெழுந்சோதி யணிய திருநீறு உண்டு. இந்த ஐந்து பொருள்களும் உங்கட்கு அரண் புரியும். அஞ்சன்மின்!" என்று அருளிச் செய்தார்.

திங்களங் கண்ணிப் புத்தேட் கேவபுக் கமல முண்டு
கோங்கவிழ் மலரு' முண்டு குளிர்தரு புனலு முண்டு
தங்கும்அஞ் செழுத்து முண்டு தவளவெண் ணீறு முண்டு
வெங்கலிக் குடைவ தென்னே? வெள்ளறி வுடைய யரேபோல்

ஆதலால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பஞ்சாக்கரம் ஓதி வெண்ணீறு பூசி சிவ வழிபாடு செய்வோர். கலிக்கு அஞ்ச வேண்டியதில்லை.

யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கின்ற நிமலன் சிவலிங்கத் திருமேனியில் விளங்கித் தோன்றுகிறான். பசுவின் உடம்பெங்கும் பரவி நின்றுலும் மடியில் அப்பால் வெளிப்படுமாறு என்றுணர்க.

எல்லா உயிர்களிலும் இறைவன் பாலில் படு நெய்போல் மறைய நின்றுள்ளான். அப்பரமபதியை நினைந்து நினைந்து நெக்கு நெக்கு உருகி வழிபடும் அடியாரது திரு உள்ளத்தில் கடைந்த தயிரில் வெண்ணெய் போல் விமலன் எதிர்பட்டு நிற்பன் அதனுல் ஆலயங்களையும், அடியாரையும் அரனுகவே வணங்குதல் வேண்டும்.

"மாலறநேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானமும் அரனெனத் தொழுமே"

என்கின்றது சிவஞான போதம்.

திருக் கோயிலிற் சென்று இறைவனைக் கண்டவர் முத்தி கண்டவர் ஆவர்.

பண்டனைப் பண்டனை யோது பெம்மானைப் பணிவரைகோ
தண்டனைத் தண்டனைத் தண்டனைச் செய்முட்தண்டனை மூ
தண்டனை யண்டர் தொழுந் திருமாற் பேறமர்ந்த மேனி
கண்டனை, கண்டனையாயின் நெஞ்சே முத்தி கண்டனையே.

ஆதலால் மனிதப் பிறவியை எடுத்த நாம் அனைவரும் அவநெறியில் செல்லாது, சிவநெறியைக் கடைப்பிடித்து திருக் கோயில் வழிபாடு, பாராயணம், ஜெபம், தியானம், மனவொடுக்கம் முதலிய சாதனங்களைச் செய்து உய்வு பெறுவோமாக!

(முற்றும்)

# மனித உறுப்புகளில் மூலிகைகளின் குணாதிசயங்கள்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

## மலச் சிக்கல் அகற்றி.

அத்திப் பழம், சீமை அத்திப் பழம், ஆமணக்கு நெய், ஆகாச தாமரை, அம்மாம் பச்சரிசி, அகத்தி இலை, அக்ரோட்டு, அந்திமல்லி இலை அரசம் விதை, அருநெல்லி, முடக்கத்தான், முசுமுசுக்கை, முள் இலந்தை மூக்கரட்டை, வில்வப்பழம், முள்ளங்கி, வங்கார வெள்ளக் கீரை, வாழைப் பழம், வெந்தயக் கீரை, வெள்ளருகு, நிலக் கடலை, வேங்கைப்பிசின், மாங் காய், மாம்பழம், மாவிலங்கு மரப் பட்டை, வேர் பட்டை, ஆலம் விதை அன்ஞசிக் காய், அழிஞ்சில், உருளைக் கிழங்கு, ஆல்பகோடா பழம், புாதாம் பழம், ஆளிவிதை, கொத்துக் கடலை, ஊசித்தகரை, எள்ளு, கட்டுக் கொடி, கலவாங் கீரை, கரும்பு, சதக் குப்பை கலியாண முருக்கு, மணலிக் கீரை, பெருங்காயம், மந்தாரைப் பூ-வேர்-பட்டை, செம்பரத்தை பெருங் களர்வா, சேமைக் கிழங்கு, சேமைக் கீரை, கொடிப் பசளைக் கீரை கீரைத் தண்டு. பண்ணைக் கீரை, பரட்டைக் கீரை பிண்ணாக்குக் கீரை, பாற்சொரிக்கீரை, நீர் வல்லாரை, இளநீர், பலா, பற்பாடகம், பாவட்டை, பீத ரோகிணி, பீநாறி மரம், பெரியாநங்கை, புளியம் மழம்-பழ ஓடு, புகை யிலை, திராட்சை, தான்றிக் காய், தக்காளி, தமரத்தங் காய், நிலப்பூசணி, பப்பாளி, சோளம், கேழ்வரகு, சத்திச்சாரணை. கூந்தல்பனை, கார்போகரிசி, குன்றி, கொழுஞ்சிப்பட்டை, வாதநாராயணன் கீரை, சரக் கொன்றை, கடுக்காய், நெல்லி வற்றல், சூரத் நிலாவாரை ஆகியனவாகும்.

பின்குறிப்பு:

மேல் குறிப்பிட்ட மூலிகைகளில் சிலவற்றைத் தனித்துச் சாப்பிடக் கூடாது. மற்றைய மருந்துகளோடு சேர்க்காமல் தனித்துக் கொடுக்கும் மூலிகைகளும் உண்டு. இவைகளை இடபேதம் கண்டு மருத்துவர்களின் ஆலோசனை பேரில் பயன் படுத்துவது நன்மை தரும். கீரை இனங்களை மட்டும் பயமின்றி பகல் சாப்பாடடில் சேர்த்து வர மலச் சிக்கலை அகற்றி நன்மை பயக்கும்.

## முறை வெப்பம் அகற்றி.

குறிப்பிட்ட நேரம், நாள், கிழமை, திதிகளில் தவருமல் வரும் முறை காய்ச்சல் போன்ற வியாதிகளைத் தடை செய்கின்ற பொருள்கள்:

வெண்சித்திரமூலம், வேம்பின் காய்-பழம்-வேர்-பட்டை ஆகிய வைகளைச் சேர்த்த சமூலம், மிளகு, மிளகரணை பட்டை, பேய் அத்திப் பட்டை, மாசிக்காய், வசம்பு, அவுரி, ஆடு தீண்டா பாளை, கடுகு ரோகிணி, அதிவிடையம், ஏழிலைப் பாலை, காட்டுச் சீரகம், கழற்சிக்கொடி நற்சங்கன், நாயுருவி, சண்பகம், சீந்தில் கொடி, பேய் புடலம், கோவை ஆகியனவாகும்.

## முத்தோடம் அகற்றி.

ஆயில்யம் பட்டை, கரி மஞ்சள், திரிபலை, (தானிக்காய், நெல்லிக் காய், கடுக்காய்) உத்ராட்சம், இதை உடம்பில் அணிய முத்தோடம் அழி யும். முத்தோடம் என்பது வாத, பித்த, சிலேத்துமம் என்ற தோஷங்களை குறிக்கும்.

## மேகப் பிணி விலக்கி.

மேக ரோகத்தால் வந்த புண்புரைகளைப் போக்கும் பொருள்:

பரங்கிப் பட்டை, கெட்டி பூவரசம் சமூலம். ( இலை, வேர், மரப் பட்டை, காய், பூ )

## ருது உண்டாக்கி.

பெண்டிர்க்கு மாதந் தோறும் ஆகின்ற வீட்டுவிலக்கை சரி செய் கின்ற பொருள்:

பிரண்டை, வெந்தியக் கீரை, செம்பரத்தை, அன்னுசிப் பழம், கற்ருழை, (மடல்-பால்) காட்டு முள்ளங்கி, காட்டு வெங்காயம், கோரைக் கிழங்கு, குங்குமப்பூ, குப்பை மேனி, குருவேர், ஈஸ்வரமூலி, ஆடுதீண்டா பாளை, கலியாண முருக்கு, எள்ளு, கருஞ்சீரகம், கடுகுரோகணி, சதக்குப்பை, கருஞ்செம்பை, சிவகரந்தை, பப்பாளி, நுணுப்பட்டை, பெருங்காயம், பிளப்புச் சீரகம். மலைவேம்பு மஞ்சிட்டி, மூங்கில் குருத்து. தும்பை பருத்தி, வளேந்திர போளம், வல்லாரை ஆகியனவாகும்.

## வரட்சி அகற்றி

உடலின் உட்புறம் அல்லது மேல் புறம் சருமத்தின் வரட்சிகளை நீக்கி அவற்றை மிருது தன்மை ஆக்கி வலி, கட்டி ஆகியவைகளைத் தணிக்கின்ற பொருள்கள்; உள் எரிச்சலையும் அடக்குகிற பொருள்கள்:

அருகம்புல், ஆமணக்குநெய், கடற்பாசி, சிற்ருமுட்டி, சீமைஅத்தி பழம், செம்பரத்தை, அமுக்கனுங் கிழங்கு, அதிமதுரம், அந்தரத்தாமரை, வேர், கற்பாசி, கருவேலன் பிசின், இலந்தை, ஆல்பகோடாபழம், ஸ்பகோல்விதை, களா, இனிப்பு வாதுமை, கைப்பு வாதுமை, எள்ளு, கருஞ்சீரகம், நிலப்பனைக் கிழங்கு, தேள் கொடுக்கு இலை-பிசின்-பட்டை, புத்திர சோகி இலை, பருப்புக்கீரை, வெந்தியக் கீரை-விதை, வெண்டைக்காய் புளிச்சாறு கீரை நிலக் கடலை ஆகியனவாகும்.

(தொடரும்)

## அடங்காத இருமலுக்கு

அதிமதுரம், பொறித்த வங்காரம், வெள்ளை மிளகு வகைக்கு ஒரு ருபாய் எடை கல்வத்திலிட்டு குமரி சோற்றை விட்டு (1 பலம் அளவு) அறைத்து உலர்த்தி வைத்துக் கொண்டு அடிக்கடி வரும் இருமலுக்கு, இரண்டு மாத்திரை வீதம் வாயில் அடைத்து வைத்து சுரக்கும் உமிழ் நீரை விழுங்கிவர அடங்காத இருமல் சாந்தியாகும்.

உ

முருகா

# இலட்சியவாதி

மு. பெருமாள்

(சென்ற மாதத்தொடர்ச்சி,)

குரங்குக் கொப்பாகக் கூறினர் மனதைக் குறித்துப் பெரியோர்கள். குரங்கும் சிலவேளை களில் ஓய்வாக யிருக்கும். சமுத்திர அலையும் காற்றில்லாத போது சிறிது ஓயும், அலையாக அலைந்து கொண்டே நம்மை அல்லல் படவைக்கும் மிக மிக மட்டமானது மனம் தான். இதை இறைவன் உயிரோடு (ஆத்மாவோடு) எதற்காக இணைத்துள்ளாரோ? உடனிருந்தே உயிரை வாட்டுகின்றது இயற்கையாகவே ஆன்மா சுத்தமானது எனின் மனம்தான் ஆன்மாவை மாசு படுத்திவிடுகின்றது. மட்டரகத்தின் உச்ச கட்டம் ஒன்று உலகில் உள்ளது என்றால் அது மனம்தான். இத்தீய தொடர்போடு வாழவேண்டியுள்ளது. இதனை வெல்ல மாகான்கள் எல்லாம் வல்ல இறைவனை நாடியுள்ளனர்.

தனக்குவமை இல்லாதான்
தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

என்னும் தமிழ்மறை மனக்கவலையை அகற்ற விளக்கம் விளம்புகிறது. ஆகவே ஆண்டவனை வேண்டி நாம் அமைதி பெற்றுவாழ முயல்வோமாக. நன்றி செலுத்துவதற்காகவும் மன அமைதிக்காகவும் நாம் இறைவனை என்றும் வணங்க வேண்டும் என்பதை அறிந்து இருக்கின்றீர்கள் அல்லவா ?

தங்கள் விளக்கம் மிகவும் நன்ருகப் புரிந்தது. ஆயின் ஆண்டவனை வணங்குவதற்கு நெற்றியில் திருநீறு எதற்காக அணிய வேண்டும் ?

திருநீறு சிவச் சின்ன மாகும். தூய்மையானது, வாய்மையானது வெண்மை யானது, திண்மை யானது, மாயா உலகில் மயங்கிக்கிடக்கும் மக்களுக்கு நிலையாமை யின் தன்மையை உணர்த்துவது திருநீறு மயங்கி ஏமாருதே; யாவும் முடிவிலொரு பிடிசாம்பலாக முடியும் என்னும் தத்துவத்தை உணர்த்துவது

திருநீறு. இந்நிலையை உயிர்கட்கு உணர்த்தவே எல்லாம் வல்ல சிவ பெருமான் திருநீற்று மேனியராகத் திகழ்கின்றார். அவரை வழிபடும் மக்களும் (அடியார்களும்) திருநீற்றை அவசியமான சிவச்சின்னமாக அணியும் நியதியை மேற்கொண்டு இருக்கின்றனர். உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் தீயில் வெந்து கருகும். ஆயின் திருநீறு மட்டும் தீயில் வெந்தாலும் கருகாது. நிறத்தில் சிறந்தது வெண்மை. திருநீறும் வெண்மை. எல்லாக் கிருமிகளையும் போக்கவல்லது திருநீறு. இது மட்டிலுமன்று. மந்திர சக்தியும், தெய்விக சக்தியும்உண்டு திருநீற்றுக்கு. இவ்வுண்மையை உலகினுக்கு உணர்த்தியவர்களில் சைவ சமயாசார்யரான திருஞானசம்பந்தராவர். மதுரை மன்னராம் பாண்டியரது வெப்பு நோயை;

மந்திரமாவது நீறு
　　வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு
　　துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு
　　சமயத்திலுள்ளது நீறு
செந்துவர்வாயுமை பங்கன்
　　திருஆலவாயன் திருநீறே.

என்னும் பாடலை ஓதி திருநீற்றைப் பூசி கொடிய நோயைத் தீர்த்தார் என்பது வரலாறு.

எப்போதோ நடந்த வரலாறு தானே! இப்போது நடக்குமா அது? எனருன் ஒரு மாணவன்.

தம்பி! இப்போதும் உண்மையில் நிகழ்கிறது. ஒருசாமியார் இந்நாளில் திரு நீறும் வில்வத்தாலும் மக்களது மாளாத நோயை மீளாமல் காத்து, லட்சக்கணக்கான பணத்தில் கோயில் திருப்பணிகள் செய்து வருகின்றார். மற்றும் பல பெரியோர்கள் விபூதி மந்தரித்து வழங்கி தீவிர நோய்களைஎல்லாம் தீர்த்து வருகின்றார்கள். நம்பிக்கை வைத்து முயன்றால் இன்றும் உண்மையை உணரலாம். திருநீற்றை நெற்றியிலணிவதால் முகத்தில் ஒருஅருட்பொலிவு தோற்றமளிக்கின்றது. இக்காலத்திலும் அநாகரீகத்தின் பெயரால் ஏராளமான மக்கள் தங்கள் முகத்தோற்றத்துக்கு வெண்பவுடர் மாவை வாங்கி முகத்தில் அப்பிக்கொண்டு அலைகின்றனர். அதிலிருந்து வெண்மையான திருநீறு முகத்துக்கு நல்ல தோற்றம் தருகிறது என்பதை உணரலாம்தானே.

திருநீற்றை இவ்வளவு உயர்த்திப்பேசுகின்றீர்களே! அது சாணியிலிருந்து தானே உற்பத்தியாகின்றது.

## மூலிகையே திருநீறாகும்!

பசுவின் சாணத்திலிருந்துதான் திருநீறு உற்பத்தியாகின்றது. சாணத்தின் அடிப்படை மூலிகையே. பிண்ணாக்கும், கழுநீரும் அருந்தும் சாணம் வெறும் குப்பையும், சக்கையுமாகும். இம்மாதிரி சாணத்தில்

திருநீறு உற்பத்தியாகவில்லை. பசு தின்னும் பச்சைப்புல், அகத்திக்கீரை, வைக்கோல், தழைகள், முதலான மூலிகைகளின் அடிப்படைதான் சாணத்தின் சிறப்புக்குக் காரணம். இம் மூலிகைகளின் மூல சக்தி சாணத்தில் கலந்திருப்பதால் தான் பசுவின் சாணத்துக்கு உயர்வு. இவை உலர்த்தப்பட்டு "சிவாயநம" என்னும் பஞ்சாட்சரம் ஜெபித்த வண்ணம் எரித்துச் சாம்பலாக்கிய பின்னர் திருநீறு என்று கொள்ளப்படுகிறது. ஆகவே மணிமந்தர ஔஷதங்களில் மிகச்சிறந்ததாகக் கொண்டதின் காரணம் திருநீறு மூலிகைகளின் அடிப்படையிலிருந்தே உற்பத்தியாகின்றது என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

மேலும் பசு "சாகபட்சணி" அதாவது பசு சைவப்பிராணி, வேதங்களாலும், தேவர்களாலும், மனிதர்களாலும், மகான்களாலும், பூஜித்துப் போற்றத்தக்க புண்ணியம் நிறைந்தது பசு. எனவே இத்துணை மகத்தான மூலிகைகளின் சக்தியும், வேதங்களின் பக்தியும், ஆண்டவன் அருளும், மகான்களின் ஆசியும் ஆற்றலும் திருநீற்றில் கலந்து நிறைந்திருப்பதால் மிகச் சிறந்ததாக மதிக்கப்படுகிறது. ஆண்டவனை வணங்கும் அனைவரும் திரு நீற்றை அணியலாம். சாதி, மதங்களின் ஐக்கியச் சின்னமாகும் திருநீறு.

இச்சமயத்தில் எதிரிலுள்ள குடிசை வாயிலில் ஒருவள் தன் ஒரு வயது குழந்தையை ஒருகையைப் பிடித்து உயரத்தூக்கி அதன் முதுகில் பொத்து, பொத்தெனச் சாத்தினுள் குழந்தை வீரிட்டலரி யழுதது இதைக்கண்ட இலட்சியவாதி உடனே ஓடித் தடுத்தார்.

தாயே ஏனம்மா குழந்தையை அடிக்கிருய்?

எப்போதும் சிணுங்குகின்றது அழுது கொண்டே யுள்ளது அடங்காப்பிடாரி ஆதலால் தான் முதுகில் இரண்டடி வைத்தேன் என்றனள் குழந்தையின் தாயென்னும் குணவதி.

### குழந்தை வளர்ப்பும், சிகிச்சையும்

தாயே நீயே ஒரு குழந்தையாகவுள்ளாய்! இந்தச் சிறிய வயதில் உனக்கு ஒரு குழந்தை பிறந்து விட்டது. குழந்தையை வளர்க்கும் கலையறிவை நீ எங்ஙனம் அறிவாய்! பால்யமணத்தின் பிழையாகுமிது. பிள்ளையைப் பெற்று விட்டால் போதுமா? குழந்தையை வளர்ப்பதை முதலில் கற்றுக் கொள்ளம்மா! தாயாகி விடுவது எளிது. தாயன்பும் அனுபவமும் அரிது.

பின்ன என்னங்கோ குழந்தையிலேயே இந்த அழுகையும் சிணுங்குதலும். இதுக்கு சாவு வரலையே. வந்தாலும் வாரி போட்டு முழுகி விடுவேன். எத்தனை நாட்களுக்குப் படுவது துன்பம் என்றனள் அந்தப் புண்ணியவதி. (தொடரும்)

# "பிஞ்சிலே பழுத்தவை"

—:வள்ளல்:—

கட்டுடல் காளை இன்று கால்கள்தள் ளாடு கின்றான்!
பட்டுடல் மேனி மைந்தன் பஞ்சுபோல் வெளுத்து விட்டான்
திட்டமில் லாத வாழ்வால், தீயரின் நட்பால் பாவம்
மட்டமாய் மாறி விட்டான், மனிதனென்(று) உலவு கின்றான்!

திரைப்படம் ஒன்று வந்தால் தினமும்அங் கிருப்பான் தீயர்
'மறைவிடம்' அழைத்தா லங்கு மகிழ்வுடன் செல்வான்! எங்கும்
அறைகுடத் தோடு கூடி அமர்க்களம் செய்வான்! இன்று
முறையிட யாரிங் குள்ளார்? முற்றிலும் முற்றிப் போச்சே!

ஓவியம் அழிந்து போனால் வேறொன்று தீட்ட லாகும்!
காவியச் சிற்பம் போனால் கலைஞனே வடித்துக் கொள்வான்
பாவிஇம் மனிதன் தன்மெய் 'பவிசு'எலாம் கெட்டு விட்டால்
கூவிமற் றழுவ தல்லால் கொண்டிட என்ன உண்டு?

பிஞ்சிலே பழுத்து விட்டான்! 'பெரியவன்' ஆகி விட்டான்!
அஞ்சுவ தஞ்ச வில்லை! ஆட்டமாய் ஆடி விட்டான்!
எஞ்சிய தெல்லாம் இந்த இளைத்தமெல் லுடல்தான்! யாவும்
மிஞ்சியே விட்ட பின்னால் யார்என்ன செய்ய லாகும்?

அரும்புகள் கோணிவிட்டால் அவைமணம் குன்று மோதான்?
கரும்புகள் கோணி விட்டால் கட்டியும் பாகு மாகும்!
ரும்புகள் கோணி விட்டால் யானையை வெல்ல லாகும்
நரம்புகள் கோணி விட்டால் நாம்அதற் கென்ன செய்வோம்?

# கொக்கிப் புழு

சென்ற மாதத் தொடர்ச்சி

ஆண்புழு 8-10 மி. மீ, நீளமும் 0.4-0.ு மி. மீ, பருமனும் பெண் புழு 12-18 மி. மீ. நீளமும், 1 மி. மீ. பருமனும் உள்ளன. ஆணை காட்டிலும் பெண் புழு தடித்தும் நீண்டும் இருக்கிறது. இவைகளின் வாயில் கொக்கி போன்ற நாக்கு வளைவுகள் இருக்கின்றன, இவை குடலின் உட்சுவரைக் கவ்விப் பிடிப்பதற்கு உதவுகின்றன.

இப் புழு முட்டை இடுகிறது. மலத்திேைடு வரும் முட்டை தரையில் ஈரமிருந்தால் ஒன்று அல்லது இரண்டு நாட்களில் பொரிக்கிறது. புழுக் குஞ்சாகிய லார்வா 3, 4 மாதங்களுக்குக்கூட உயிரோடிருக்கிறது. மனிதனுடைய உடலில் பட்டால் உடனே அது தோலைக் குடைந்துக் கொண்டு உடலுக்குள்ளே போகிறது. அங்கிருந்து இரத்த ஓட்டத்துடனே இதயத்தின் வலப் பக்கத்துக்குப் போய், அங்கிருந்து சுவாசப் பைக்குப் போய் பிறகு மூச்சுக்குழல் வழியாகத் தொண்டைக்கு வந்து உணவுக் குழாய் வழியாக இரைப் பைக்குச் சென்று, கடைசியாக முன்சிறு குடலிலும்(DUODENUM) சிறுகுடலிலும் தங்குகின்றது. அங்கு ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கிறது. ஐந்து வாரங்களில் புழுக்கள் பருவம் அடைந்து ஆணும் பெண்ணும் சேர்ந்து, பெண் சூலாகி, முட்டையிடத்தொடங்கி விடுகிறது.

இந்தியாவில், நினைத்த இடத்தில் மலம் கழிப்பதாலும், எல்லோரும் காலுக்கு செருப்புப் போட்டுக் கொள்ளாததாலும் கொக்கிப் புழு நோய் மிகப் பலருக்கு உண்டாகிறது. இந்நோய் தகுந்த பால் சத்து. ஊன் சத்து இரும்புச் சத்து இல்லாத உணவு உட்கொள்வோரைச் சீக்கிரம் பலவீனப் படுத்தி விடுகிறது. இரத்தக் குறைவு ஏற்பட்டு, அறிவு ஒளி மங்கி, உடல் வலிமை இழந்து, இதயத் துடிப்பு மிகுந்து, கண்கள் வெளுத்து, உடலில் சோகை காண்கிறது. இந்தியாவில் இந்நோயால் 100 க்கு 90 பேர் பிடிக்கப் பட்டிருக்கிறுர்கள்.

இந்நோய் வராமல் தடுப்பதற்கு வழி மிக எளிதே. மலம் கழித்த உடனே நன்றாக மண்ணைப் போட்டு மூடிவிட்டால் புழுக் குஞ்சுகள் வெளியிலே வந்து மனிதனுடைய உடலிலே தொற்ற முடியாமல் போய் விடும் இரண்டாவதாகக் காலுக்குச் செருப்புப் போட்டுக் கொள்ள வேண்டும். இந்த இரண்டையும் செய்தால் கொக்கிப் புழு நோயை நம்நாட்டிலிருந்தே நீக்கிவிடலாம்

சாதாரண உப்பையோ அல்லது உப்புத் தண்ணீரையோ கக்கூசுகளில் தெளித்து வந்தாலும் குஞ்சுகள் வளர்வதைத் தடை செய்து விடலாம்.

டாக்டர். லா. கி. முத்துச்சாமி.
ஈரோடு (க.க.)

---


## கொக்கிப்புழு நோய்க்கு மூலிகை சிகிச்சை

பிரண்டைத் தொகையல், பாகல் காய், வேப்பம் பூ தொகையல், பச்சை சுண்டக் காய், சுண்டை வத்தல், அகத்திக் கீரை, கொத்து மல்லி, கருவேப்பிலை, திப்பிலி, மோடி, சுக்கு, ஆமணக்கு எண்ணெய், நல்லெண்ணெய், கடுகு. முதலானவைகளை அடிக்கடி சேர்த்து சாப்பிட்டு வர கொக்கிப் புழு நோய் குணமடையும்.



உ

ஸ்ரீ ராஜ பூஜித மகான்

## ஸ்ரீகுழந்தையானந்த சுவாமிகள் திவ்யசரிதம்.

ஸ்ரீ K. S. V. ரமணி அவர்கள் எழுதிய

புத்தகம் விலை: ரூபாய்2--00

கிடைக்குமிடம்: தபால் செலவு தனி.

ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகள் சத்சங்கம்

357. பைகிராப்ட்ஸ் ரோட், சென்னை-14.

# பயனுள்ள சில குறிப்புகள்

தொகுத்தவர் : விமலா.

(1) குங்குமத்தில் கூட எத்தனையோ போலி குங்குமங்கள் வந்து விட்டன. சரும நோயை உண்டு பண்ணுகின்றன. நெற்றியில். நல்ல குங்குமமா இல்லையா என்று கண்டுபிடிக்க இதோ ஒரு வழி:-

ஒரு காகிதத்தில் நீங்கள் வாங்கும் குங்குமத்தைத் தடவி ஒரு ஊது ஊதுங்கள், தெரிந்துவிடும். குங்குமம் மஞ்சளிலிருந்து தயாரிக்கப்படுகிறது. எனவே காகிதத்தில் மஞ்சள் நிறம் படிந்திருந்தால் அது நல்ல குங்குமம். இல்லாவிட்டால் இல்லை.

(2) மனிதனுக்கு உண்மையில் பல் 32 தானா? மொத்தம் 52 பற்கள் மனிதனுக்கு சின்ன வயதிலேயே 20 பற்கள் விழுந்துவிட எஞ்சி நிற்பதுதான் 32.

(3) கமகம வென்று வாசனை வீசுகிறதே அம்பர் அது என்ன? திமிங்கலத்தின் குடலிலிருந்து கிடைக்கும் மெழுகு போன்ற பொருளி லிருந்து தயாரிக்கப்படும் வாசனை வஸ்துதான் அது.

(4) மின்சார ஒத்தடம் கொடுத்து முகத்தின் நிறத்தை மாற்றி அழகு படுத்துகிறார்களாமே?

அதெல்லாம் கொழுத்துப் (பணம்) போனவர்கள் செய்து கொள் ளட்டும். நமக்கு எளிதான ஒரு வழி இதோ: திரிந்து போன தயிரில் எலுமிச்சம் பழ ரசத்தைக் கலந்து முகத்தில் பூசி பத்து நிமிடம் ஊற வைத்து வெந்நீரை விட்டுச் சுத்தமாகக் கழுவி விடவும். இப்படி அனு தினமும் செய்து வந்தால் முகம் நல்ல நிறம் பெறும்.

(5) பருத்துப் போய் கிடப்பவர்கள் எலும்பாக இருப்பவர்களைப் போலவே அழகற்றவர்கள். அவர்கள் அளவாக அழகோடு விளங்க என்ன பண்ணுவது?

பருமனைக் குறைத்துக் கொள்ள சாப்பாட்டைக் குறைத்துக் கொள்ள சொல்லுவார்கள். இது பலருக்கு மகா கஷ்டமாக இருக்கும். அப்படிப்

பட்டவர்கள் சாப்பாட்டைக் குறைத்துக் கொள்ள வேண்டியதில்லை. கோஸ், காலி பிளவர், வெள்ளரிக்காய் போன்ற — இலை அல்லது நீர் சேர்ந்த காய்கறிகளை வேக வைத்து சாப்பிடலாம், பச்சையாக பழம், ரொட்டி இவைகளை சாப்பிடலாம். இவைகளை எவ்வளவு சாப்பிட்டாலும் உடம்பு பருக்காது. பசியும் அடங்கும்.

(6) மோர்க் குழம்பு கமகமவென்று வாசனையாக இருக்கிறதே. என்ன போட்டீர்கள் ?

இரண்டு கற்பூர வல்லி இலையைப் போட்டதுதான், இது உடம்புக்கும் நல்லது. இந்தக் கற்பூர வல்லியை ஓமவல்லி என்றும் கூறுவார்கள்.

(7) ஜரிகையில் அழுக்கைப் போக்க என்ன செய்கிறது ?

பழைய கோதுமை ரொட்டித் துண்டுகளில் கொஞ்சம் எடுத்து ஒரு பாண்டத்தில் போட்டு அதில் சிறிதளவு நீலப் பவுடரைச் சேர்த்து தண்ணீர் விட்டு இரண்டையும் பிசைந்து கூழ் போல ஆனவுடன் அதை எடுத்து அழுக்குப் படிந்து கிடக்கும் சரிகையின் மேல் வைத்து நன்ருக உலர்ந்த பின் பிரஷ் கொண்டு அழுத்தி பசைகளைப் போகும்படி துடைத்தோமானல் புதிய சரிகை போல பளபளக்கும்.

(8) துணிக்கு நீலம் போட்டால் திட்டுத் திட்டாகப் பிடித்துக் கொள்கிறதே, என்ன செய்வது ?

நீலம் கரைத்த நீரில் கொஞ்சம் வாஷிங் சோடா கலந்து கொள்ளுகிறது நீலம் இப்போது ஒரே அளவில் பற்றும்.

(9) கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது, என்ன செய்வது?

நீல நிற விளக்கை எரிக்காதீர்கள். கொசுக்கள் தொல்லை அதிகமாக இருக்கும். சிவப்பு விளக்கை எரிய விடுங்கள் ; கொசுக்கள் வராது.

(10) வாழைப் பழம் நல்லதென்று இரண்டொன்று அதிமாக விழுங்கி விட்டேன். வயிறு மகா சங்கடமாகி இருக்கிறது. என்ன செய்ய வேண்டும் ?

பிரண்டைத் தொகையல் சாப்பிடுங்கள் சரியாகிவிடும். இதே போல் வெள்ளரிப் பழத்துக்கு மோர், தார்பூசணி பழத்துக்கு உப்பு, முலாம் பழத்துக்கு சர்க்கரை முறிவுகளாகும்.

(தொடரும்)

# பல் சொத்தைக்கு உணவுப் பழக்கம் காரணம்

**மக்களுக்கு அந்தஸ்து உயரஉயர அவர்களுடைய பற்கள் சிதைவு அதிகரிக்கிறது என்று பல் ஆரோக்கியம் பற்றிய புள்ளித் தகவல் கூறுகிறது. இப்போது ஆபிரிக்க மக்களுடையவாழ்க்கை நிலை இந்தக் கூற்றை மெய்ப்பிக்கிறது.**

பேராசிரியர் அலெக்சாண்டர் மக்கிரிகர், பெர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தில் பல் வைத்தியப் பிரிவுப் பேராசிரியராகப் பணியாற்றுகிறுர். கானுவில் பல் வைத்தியப் பணியை நிறுவுவதற்கான ஆலோசனைகளை அரசாங்கத்திற்குக் கூறுவதற்காக இவர் அண்மையில் கானுவுக்குச் சென்றிருந்தார். கானுவில் பல மாவட்டங்களில் வசிக்கும் சுமார் 1590 பேர்களை அவர் பரிசோதனை செய்தார். பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ள மக்களைவிட கானு மக்களுக்கு பல் நோய்கள் குறைவு என்றுலும் குறைந்த வருமானமுள்ள கிராம மக்களைவிட, அதிக வருமானமுள்ள ஆசிரியர்கள், நர்ஸுகள் முதலியவர்கள் பல் நோய்களால் வருந்துகிருர்கள் என்பது அந்தப் பரிசோதனையிலிருந்து தெரிந்தது. மக்களுடைய வருமானம் பெருகப் பெருக அவர்களுடைய பல் சிதைவும் அதற்கேற்ப அதிகமாக இருந்தது. வருமானம் அதிகமுள்ள மக்கள் ரொட்டி, சர்க்கரை மிட்டாய்கள் முதலியவற்றை அதிகமாக உண்பதே பல் சிதைவுக்குக் காரணம். 1950—1960 ஆண்டுகளுக் கிடையில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து கானு இறக்குமதி செய்த மிட்டாய் முதலிய இனிப்பு தினுசுக்களின் அளவு ஆறு மடங்கு அதிகரித்திருக்கிறது.

கானுவில் வயதுவந்தவர்களைவிட பன்னிரண்டு வயது குழந்தைகளுக்குத்தான் சொத்தைப் பற்கள் அதிகம் இருப்பதாக கண்டுபிடிக்கப் பட்டு

உள்ளது. பெரியவர்களை விட குழந்தைகள் தான் அதிகமாக மிட்டாய்களை தின்கிருர்கள். ஆகையால் இனிப்பு பண்டங்கள் பற்சிதைவுக்கு முக்கிய காரணம் என்று ஊகிக்க முடிந்தது. வாழ்க்கைத்தரம் துரிதமாக முன்னேற்றமடைந்துவரும் நாடுகளில் உணவுமாறுதல் காரணமாக, குறிப்பாக இனிப்புப் பண்டங்களை அதிகமாக உபயோகப் படுத்துவதன் விளைவாக மக்களுக்கு பற்சிதைவு ஏற்படுகிறது என்று வேறு நாடுகளிலுள்ள விஞ்ஞானிகளும் உறுதிப்படுத்தி யிருக்கிருர்கள்.

## பல்லில் வரும் இரத்தம் நிற்க.

சுக்கு, கடுக்காய், காசிக் கட்டி, இந்துப்பு இந்நான்கையும் சமமாக எடுத்துலர்த்தி தனித்தனியாக இடித்து வஸ்திரகாயம் செய்து, யாவற்றையும் கலந்து ஒரு புட்டியில் பத்திரப் படுத்தவும். பல்லில் இரத்தம் வரும் போதெல்லாம்பல்லில் தேய்த்து குளிர்ந்த நீரில் வாய் கொப்பளிக்க, இரத்தம் நிற்கும்.

கானுவின் தெற்கு பகுதியில் செழிப்புள்ள ஐரோப்பிய நாகரிகத்தின் செல்வாக்கும் உண்டு. அங்கு வாழும் மக்கள் வடக்குப் பகுதியில் வாழும் மக்களைவிட அதிமாக இனிப்புப் பண்டங்களைச் சாப்பிடுகிருர்கள். அதனுல் பற்சிதைவும் நோய்களுமுடைய மக்கள் விகிதம் அதிகமாகி இருக்கிறது. வடக்குப் பகுதியில் வாழும் மக்கள்: ஏழைகள். பழைய (பண்டைய) பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கிருர்கள். வாழ்க்கை நிலமை மாறுதல்கள்தான் பற்சிதைவுக்கு காரணம் என்பதை கானு பரிசோதனை உறுதிபடுத்துகிறது. மக்கள் சொகுசாக வாழ்ந்து இனிப்புப் பண்டங்களை அதிகமாக சாப்பிட்டதால் பற்சிதைவு ஏற்பட்டு வருந்தினுர்கள். நவீன ஆப்ரிக்காவில் ஐரோப்பிய நாகரிகத்தில்செல்வாக்கும் முன்னேற்றமும் காரணமாக மக்கள் இனிப்புப்பண்டங்களுக்கு ஏராளமாகச் செலவிடத் துணிந்தால் பற்சிதைவு என்பது பெரியதொரு பிரச்னையாக வளர்ந்துவிடும் என அந்நாட்டின் பத்திரிக்கை எச்சரிக்கின்றது.

( பால் வாகன். பிரி, செய்தி இலாகா. )




சென்ற மாதத் தொடர்ச்சி

## காட்டு கொசுக்கடி குணமும் மருந்தும்

காட்டுக் கொசு கடிப்பது அபாயத்தை விளைவிக்கக் கூடியதாகும். காட்டுக் கொசு கடித்தாலும், அல்லது கொட்டினாலும் அந்த இடத்தில் தினவு, வீக்கம், எரிச்சல் உண்டாகி பின்பு தடித்து மிகுந்த வலியை உண்டாக்கும். அதைச் சொரிந்தபின் அதிலிருந்து நீரும் வடிந்துகொண்டே இருக்கும். இந்தக்கடி விஷம் நீங்க உத்தாமணிச் சாறும், குறிஞ்சான் சாறும் ஒன்று சேர்த்து கலக்கி வைத்துக் காண்டு மேற்படி இடத்தில் மேல் பூச்சாகத் தடவிவர நீங்கும். மற்றும் அப்பிரக பஸ்பத்தை எருக்கு இலைச் சாற்றில் இரண்டு அரிசி எடை கலந்து கொடுக்க தீரும் என்று தேரையர் யமக வெண்பா கூறுகிறது.

### மலை எறும்புக்கடி குணமும் மருந்தும்

இந்த எறும்பு கடித்தால் அந்த இடம் நெருப்பால் சுட்டது போல் எரிதல், நோய் எடுத்தல், நீர்த்துளி போல் தடித்தல், அழர்ச்சி முதலிய தாங்கொணாத நோய்கள் உண்டாகும். எந்தவித எறும்பு கடி நோய்களுக்கும் குப்பைமேனி சிறிது மஞ்சள் தூள் சேர்த்து அரைத்து உடம்புக்கு பூசிவர சகலவித எறும்புக் கடிவிடங்களும் தீக்குணங்களும் நீங்கும்.

### அட்டைக்கடி குணமும் மருந்தும்

அட்டையில் நீர்அட்டை, செவ்வட்டை, காட்டு அட்டை, மரவட்டை முதலிய பல வகைகள் உண்டு. நீரட்டை கடித்தால் அதற்கு

விசேஷமான விஷக் குணங்கள் இருப்பதாக தெரியவில்லை. சிலர் உடம்பில் தேங்கிய கெட்ட ரத்தத்தை வெளியேற்ற இந்த நீரட்டையை அந்த இடத்தில் விடுவார்கள். அது அந்த கெட்ட ரத்தத்தை யெல்லாம் கடித்து உரிஞ்சி பெரிதாக உப்பிவிடும். அட்டைக்கடி சிகிச்சை என்ற ஒரு ரத்தத்தை வெளியேற்றும் சிகிச்சையும் நம் நாட்டு வைத்தியத்தில் உண்டு. விஷத் தன்மையுள்ள, அட்டை கடித்தால் அவ்விடத்தில் தினவும் வீக்கமும் காணும். பொதுவாக இதற்கு சுண்ணும்பை கடித்த இடத்தில் பூசுவது வழக்கமாகும். மேற்கண்ட அட்டைகளும் இன்றி சமாகறி அட்டை, சம்பத்வரி அட்டை, வச்சிராங்க அட்டை என்ற அட்டைகளுமுண்டு. இவைகளின் கடி விடம் நீங்க ஆடுதீண்டாபாளை சாற்றில் அப்பிரகபற்பத்தை கொடுக்க இவைகளின் விஷங்கள் தீரும் என்பதை விட ஆரூடம் கூறுகிறது. செவ்வட்டை கடித்தால் கடிவாய்தடித்து சொரணை இன்றி திமிர் பிடிக்கும். காட்டு அட்டைக் கடியால் மேற்கண்ட குறி குணங்களும் அன்றி நமைச்சல் உண்டாகும். இவைகளின் கடிவிஷம் நீங்க புனல் முருங்கை, எருக்கன்வேர் இவைகளை வேப்பங் கொட்டைத் தைலத்தில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

## மரவட்டை

இதில் பெருமரவட்டை, சிறுமரவட்டை, செம்மரவட்டை, கருமரவட்டை, வெண்மரவட்டை என்று பலவகை உண்டு.

இம் மரவட்டைகள் மேற்கூறிய அட்டைகளுக்கு பார்வையில் வேறுபட்டு இருக்கும். இது தரையில் ஊர்ந்து செல்வதற்காக தலைமுதல் கால் வரை நூற்றுக் கணக்கான கால்கள் உள்ளன. ஆனல் முன் கூறிய அட்டைகளுக்கு கால்கள் இல்லாமல் தலைப் புறமும், வால் புறமும் நீண்டு வளைந்து தத்தித் தத்திச் செல்லும்.

மரவட்டை இனம் கடித்தால் சரீரம் தடித்தல், வியர்வை, வீக்கம், நோவு, கருஞ்செம்பைப்பூ போன்ற நிறம் ஆகி பொடி சிறங்குகள் எழும்பி தொல்லை தரும்.

## மரவட்டைக் கடிகளுக்கு சிகிச்சை விவரம்

சுக்கு, திப்பிலி, சூரணம் அல்லது காட்டுவாகை வேர்–இலை–பட்டை பூ காய் இவைகளில் ஒன்றை வெந்நீரில் அரைத்து பிழிந்து வடிகட்டி. மூக்கில் நசியமிட்டு உள்ளுக்கும் பத்து துளி விட்டு கடிவாயில் பூசிவர மேற்கண்ட விடக் குணங்கள் தீரும். எல்லாவித அட்டை கடி விடங்களுக்கும் தண்ணீர் விட்டாங் கிழங்கு சாற்றை $\frac{1}{2}$ அவுன்சு வீதம் கொடுக்க தீரும்.

(தொடரும்)

# ஆசிரியர் அறிக்கை

* மூலிகை மணி ஒரு மருத்துவ மாத சஞ்சிகை. பண்டைய தமிழ் மருத்துவத்தில் ஊறித்திளைத்து ஆழ்ந்த அனுபத்தின் அரிய உயரிய படைப்பைக் காட்டும் பத்திரிகை.

* தமிழ் தெரிந்த ஒவ்வொரு குடும்பமும் சந்தாதாரராரச் சேர்ந்து தங்கள் வாழ்வின் வழிகாட்டியாகக் கொள்ள வேண்டியது சிறப்பு. ஒவ்வொரு தமிழ் மாதமும் வெளிவரும் ஒப்பற்ற வைத்தியக் களஞ்சியத்தின் தனியிதழ் விலை 0—50. காசு (60- காசு அனுப்பினுல் தபாலில் கிடைக்கும்.) ஆண்டுச்சந்தா ரூ 5—00. (அரையாண்டு சந்தாகிடையாது.) மூவாண்டுச் சந்தா சேர்ந்தால் "நம் நாட்டு மூலிகைகள்" முதல் பாகம் இலவசம். 'மூலிகைமணி' அச்சகத்திலிருந்து நூல்பல வெளியிடுவது எங்கள் குறிக்கோள், திட்டப்படி ,தினமணி சுடரில்' பல ஆண்டுகளாகத் தொடர்ந்துவந்த "நம் நாட்டு மூலிகைகள்" என்னும் கட்டுரைத் தொகுப்பை இன்னும் விளக்கமாக மூன்று பகுதிகளாக வெளியிடுவோம். ஒவ்வொரு பகுதியும் ரூ. 3 (அடக்க விலைப் பதிப்பு) ஆகும் தபால் செலவு தனி. அடுத்து பல வெளியீடுகளைப்பற்றி மூலிகை மணியில் வெளிவரும்.

*சந்தாதாரர்கள் கடிதம் எழுதும் போது தங்கள் சந்தா எண்களை மறவாமல் குறிப்பிட வேண்டும். உடனுக்குடன் ஆவன செய்ய நன்றுயிருக்கும்.

* வாசகர்கள் தங்கள் நோய்பற்றி எழுதினுல் "நோயும்மருந்தும்" பகுதியில் விடை வரும். கேள்வி கேட்பவர்கள் அந்தத் தபாலின் மீது நோயும் மருந்தும் என்று குறிப்பிட வேண்டும்.

* எழுத்தாளர்களுக்கு:- நமது பத்திரிகையில் சித்த மருத்துவ ஆராய்ச்சி, நோய்களைத் தீர்க்கும் அனுபவக் கட்டுரைகள், உடலியல் ஆய்வின் சிந்தனைத் தெளிவுகட்கே முதல் இடம். மற்ற கதை கவிதை கட்கு மூன்றுமிடமே என்பதைக் கருத்திலுணர்ந்து அனுப்புக வெளியிடப் படும் கட்டுரை அனைத்தும் மூலிகை மணிக்கே.

* ஏஜண்டுகளுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் மூலிகைமணி இதழ் வெளிவருவதற்குமுன் தங்கள் முன்மாதத்திய பாக்கியை அனுப்பினுல்தான் புதிய பத்திரிகை அனுப்பப்படும். அதிக பத்திரிகை தேவையானுல் 10 நாட்களுக்கு முன்பே, முன்பணம் அனுப்பித் தங்கள் தேவையைக் குறிக்க வேண்டும். விற்பனைத்தொகை வருவது தாமதப்பட்டால், இதழ் அனுப்பப்பட மாட்டாது.

# மூலிகைமணி வளர்ச்சி நிதி

| | | | | |
|---|---|---|---|---|
| திருமதி. | பரணி அம்மாள். பெங்களூர். | ரூ | 15 | 78 |
| உயர்திரு. | ஆர். கிருஷ்ணமூர்த்தி. தும்கூர். | ... | 12 | 00 |
| ,, | த. நடராஜன். திருச்சி. | ... | 11 | 06 |
| ,, | சா. ராமசாமி. ராயவரம். | ... | 10 | 00 |
| ,, | ஆர். கிருஷ்ணசாமிநாயுடு. காஞ்சிபுரம் | ... | 10 | 00 |
| ,, | ஏ. சீனிவாசன். மதுரை. | ... | 10 | 00 |
| ,, | G. D. நாயுடு. கோவை | ... | 10 | 00 |
| ,, | எம். கே. கொளந்த வேலப்ப கவுண்டர் | | | |
| ,, | பா. நஞ்ச கவுண்டன்பாளையம் | ... | 10 | 00 |
| ,, | வெ. உமையொருபாகம். கோவில்பட்டி | ... | 10 | 00 |
| ,, | எஸ். கே. ஜெயினுலாப்தீன். பெ.வயல் | ... | 10 | 00 |
| ,, | ஏ. மாணிக்கவாசகம். | ... | 10 | 00 |
| ,, | எம். எஸ். காமாக்ஷிரத்தினம். தஞ்சை | ... | 9 | 00 |
| ,, | பெ. ஆறுமுகம். தென்னூர். | ... | 5 | 00 |
| ,, | வி வில்வநாதன். ஆனூர் (போஸ்டு) | ... | 5 | 00 |
| ,, | D சுப்பிரமணியம். கொடுமுடி. | ... | 4 | 94 |
| ,, | சி. வி. ஸ்ரீனிவாசராகவன். | ... | 2 | 00 |
| ,, | ஆர். நஞ்சப்பன். மதுக்கரை. | ... | 1 | 00 |
| ,, | சி. ஆர். பாஸ்கரன் நாயர். பாலக்காடு. | ... | 1 | 90 |
| ,, | T. S. கலியாணசுந்தரம். சென்னை. | ... | 1 | 00 |
| திருமதி. | ஆர். சோனுபாய். நீடாமங்கலம் | ... | 0 | 90 |
| | முன்மாத வசூல் | ... | 78 | 70 |
| | ஆகமொத்தம் | ரூ | 227 | 38 |

## நம்நாட்டு மூலிகைகள் 2-ம், பாகம்

"நம் நாட்டு மூலிகைகள்" இரண்டாம் பாகம் வெளியீடு ஜனவரி மாதம் 15 ம், தேதிக்குமேல் "அருள்மொழிஅரசு திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள்" அவர்களால் வெளியிடப்படும். விழாதேதி தினமணியில் பின்னர் அறிவிக்கப்படும். ரூ. 3—30. அனுப்புகின்றவர்களுக்கு தபால்செலவுடன்புத்தகம் அனுப்பி வைக்கப்படும். —மானேஜர்.

# கௌமாரம்

இந்தியாவில் பண்டுதொட்டு வழங்கி வரும் வைதீக சமயங்கள், சைவம், வைணவம், சாக்தேயம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் ஆறுமாம். இவற்றுள் கௌமாரம் என்பது குமாரக் கடவுளாகிய முருகனை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபடும் சமயம்.

குமாரக் கடவுள் சிவபிரானுடைய மகன் என்று சொல்லப்படினும், தந்தையெனவும், மகனெனவும், கருதப்படுவது ஒரு முதற்பொருளே.

குமாரக் கடவுள் ஆறுமுகங்களும் பன்னிரண்டு கைகளும், வேலும், பிறபடைகளும், மயில் ஊர்தியும், சேவற் கொடியும் உடையவர். தெய்வயானையம்மையார், வள்ளிநாச்சியார், இவர்தம் தேவிமார். இவருக்கு இங்ஙனம் கூறப்படும் திருவுருவம் உயிர்களுக்குவரும்என்பு, நரம்பு முதலிய வற்ருல் ஆகிய உடம்பு போன்றதன்று; பரம்பொருளுக்குரிய திருவருள் குணங்களுள் இன்ன குணம் இன்ன உறுப்பாம் என எண்ணி வழிபடுதற் பொருட்டு திருவருளால் அமைந்தது. ஆகலின் அருளே இவர்தம் திருவுரு. பரம்பொருளுக்கே உரியன எனப்படும் முற்றுணர்வு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயமுடைமை, பேரருள், வரம்பில்ஆற்றல் என்னும் ஆறு அருட்குணங்களே, ஆறு திருமுகங்கள். இச்சை, அறிவு, செயல், என விரிந்த, தடையின்றித் தொழில்படவல்ல சக்தியே மூவிலையாகக் கிளைத்தெழுந்தவேல். எல்லாப் பொருளையும் ஒருங்கே அறியவல்ல ஞான வல்லபமே தெய்வயானை அம்மையார். எல்லாச் செயலையும் விழைந்த வாறே இயற்றவல்ல கிரியா வல்லபமே வள்ளி நாச்சியார். ஞானயோகத்தில் பரம்பொருட் காட்சிக்கு முன்னர், அகமுகமாகக் கேட்கப்படும் நாதமே கோழிக்கொடி. அவ்வமயம் காணப்படும் விந்துவே மயில். வேல் ஞான சக்தியும், வள்ளி இச்சாசக்தியையும், தெய்வயானை கிரியா சக்தியையும் குறிப்பதாகவும் கொள்வதுண்டு. இவ்வாறு இவரது திருவுருவத்தின் உண்மை உய்த்துணரப்படும்.

வேறு வேறுபயன் வேண்டுவோர் வேறு வேருக எண்ணி வழிபடு தற்கு உரியவையாய் ஞான சக்திதரன் முதலாகப் பதினுறு மூர்த்தங்கள் குமாரக்கடவுளுக்குச் சொல்லப்படுகின்றன. அவை குமார தந்திரம் என்னும் வடமொழி ஆகமத்து, மந்திரோத்ரப் படலத்தின் கண்ணும், தணிகை புராணம் அகத்தியர் அருள் பெறு படலத்தின் கண்ணும் விளக்கப்பட்டுள்ளன.

குமாரக் கடவுளை வழிபடும் நெறியினை உணர்த்தும் நூல் மேல் குறித்த குமாரதந்திரமே ஆகும். அதன்கண் 'ஓம் ஸ்ரும் ஸ்கந்தாய நம' என்பது குமார கடவுளுக்குரிய மூலமந்திரம் எனவும் 'ஓம் சரவண பவ ஹ்ரீம்' என்பது ஆறெழுத்து (சடாட்சரம்) எனவும் உள்ளன. வழக்கத்தில் 'ஓம் சரவணபவாய நம' என்னும் வடிவிலுள்ள ஆறெழுத்தே எண்ணப்படுகிறது. 'நமக்குமாராய' என்பது ஆறெழுத்து மந்திரம் என்று திருமுருகாற்றுப்படை உரையில் நச்சினுர்க்கினியர் காட்டுவார். அருணகிரி நாதர், நாதர் குமரா நம என்(று) அரனுர் - ஓதாய் எனஓ தியதெப் பொருள்தான்' எனக் கந்தர் அனுபூதியிற் கூறியுள்ளதும் ஈண்டுச் சிந்தித்தற்குரியது.

முருகப் பெருமானது தோற்றம், வரலாறு, பெருமை முதலியவற்றைத் தெளிவாக இலக்கண வகையாலும் உருவக வகையாலும் கந்த புராணம் உணர்த்தும். வாதுளாக மத்தில் உலகத் தோற்றம் கூறுமிடத்து சதாசிவரிடத்தில் உண்டான மகேசரது இதயத்தினின்றும் சண்முகனுர் தோன்றுவர் என்னும் உரையைக் காணலாம்.

முருகப் பெருமானைப் பற்றிய வாழ்த்துக்களும், குறிப்புக்களும் சங்க இலக்கியங்களில், சிறப்பாக பரிபாடலில் உள்ளன. தொல்காப்பியர் 'சேயோன் மேய மைவரை உலகம்' என முருகனைக்குறிஞ்சிநிலத் தெய்வமாகக் கூறியுள்ளனர்.

குமாரக் கடவுளை வழிபட்டு அருள் பெற்றவர்களகக் கூறும் பழைய அடியார்களுள் அகத்தியர், வாமதேவர், என்னும் முனிவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழ்நாட்டு வரலாற்றுக் காலத்துட்பட்டுவரும் பெரியோர்கள் நக்கீரனுர், கச்சியப்ப சிவாச்சாரியார், அருணகிரிநாதர், திருச்சிற்றம் பல நாடிகள், குமரகுருதாச சுவாமிகள் முதலாயினேர் ஆவர்.

முருகக் கடவுளது வழிபாட்டிற்குச் சிறந்த புகழ்பாக்களாகவும், அனுபவ வாக்குகளாகவும் உள்ளவை, திருமுருகாற்றுப்படை, கந்தர் அனு

பூதி, திருப்புகழ், கந்தர்கலிவெண்பா, குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி சண்முக கவசம், பஞ்சாமிர்த வண்ணம் முதலியனவாம். கௌமார சமயத்துள் பிறப்பு, வீடு, என்பன வற்றின் இயல்புகளும் பொருளுண்மை பொருளியல்புகளும் சித்தாந்த சைவத்துட் கூறுமாறே கொள்ளப்படும்.

கணேசர் இடையூற்றை நீக்கும் கடவுளாக கருதப்படுமாறுபோலக் குமாரக் கடவுள் சாத்திர ஞானத்தான் வரும் மனக்குழப்பத்தை நீக்கி, உண்மை ஞானத்தை உணர்த்தும் ஞான குருவாகக் கருதப்படுகிறுர் என்பது உணரத்தக்கது. பரிபாடற்கண் முருகனை நோக்கி, 'யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால், அருளும், அன்பும் அறனும்மூன்றும்' எனவரும் வேண்டுதல் எண்ணுதற்குரியது,

திரு. க. வச்சிரவேல் முதலியார். பீ. ஏ., எல்.டி., (க. க.)

# தேனும் விளையாட்டுப் போட்டியும்.

இக்காலத்தில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆகையால் நாம் விளையாட்டுகளில் பங்கு கொள்ள வேண்டுமானுல் பலம், சக்தி,உழைப்பு இம்மூன்றும் தேவை. விளையாட்டுப் போட்டிநடக்கிறதே அதில் பங்கு கொள் என்று பிறர் சொல்ல, விளையாட்டுப் போட்டிக்கும், எனக்கும் ஒருகாத தூரமாயிற்றே என்று கூறுபவரையும் நாம் பார்த்திருக்கிறேம். காரணம் மேற்கூறிய மூன்றும் இல்லாத குறையே! இம்மூன்று குறைகளையும் போக்கி ,போட்டியில் பங்கும் கொண்டு பரிசு பெறவும் செய்கிறது கைகண்ட மருந்தாகிய தேன்.

விளையாட்டுப் போட்டியில் பங்கெடுத்துக் கொள்பவர்கள், போட்டித் துவங்க அரைமணி நேரம் இருக்கும்போது, இரண்டு அல்லது மூன்று தேக்கரண்டி அளவு தேனை உட்கொள்ள, போட்டியில் நிச்சயம் வெற்றி பெறலாம். இம்முறையை மற்ற மாணவர்களுக்கும் சொல்லி வையுங்கள்.

விளையர்ட்டுப் போட்டியில் பலபிரிவுகள் உண்டு. (ஓடுதல், தாண்டுதல், பளு தூக்குதல்) ஆகையால் பிரிவுக்கு ஏற்றவாறு உட்கொள்ளும் அளவை ஏற்ற வேண்டும்' ஓடும் போட்டியில் கலந்து கொண்டு கால்கள் சோர்வடைந்து விட்டன. அடுத்து தாண்டும் போட்டியில் நாம் எப்படி கலந்துகொள்ள முடியும் என்று கவலைப்பட வேண்டாம்' ஒவ்வொரு பிரிவு ஆரம்பமாவதற்குமுன், இரண்டு அல்லது மூன்று தேக்கரண்டி அளவு தேனை உட்கொண்டு பிறகு பங்கு கொள்ள, உடனே புத்துணர்ச்சி உண்டாகும். பிறகு கேட்கவும் வேண்டுமா? நிச்சயம் வெற்றி உங்கள் பக்கம்! (புலி)

# ★ இதய ஒலி! ★

காமராசர் படிப்பகம். 27—12—65.

வைத்திய சித்தர் திருவாளர் கண்ணப்பர் அவர்கட்கு, வணக்கம்.

ஐயா, தங்களுடைய மூலிகை மணியை எங்களூர் படிப் பகத்தில் வாசித்து நாங்கள் நற்பயன் அடைந்து வருகிறோம். தாங்கள் வெளியிட்ட முதல் பாகம் " நம்நாட்டு மூலிகைகள் " கிராம மக்களுக்கு ஓர் அரிய பொக்கிஷம் ஆகும். அதிலிருந்து சில மருத்துவ முறைகளை " ராணி என்ற வாரப்பத்திரிகையில்" பாட்டிவைத்தியம் என்ற தலைப்பில் வாசகர்கள் கேட்கும் கேள்விக்குப் பதிலாக தரப்படுவதைப் பார்த்தோம். உங்கள் முதல் பாகத்தில் கண்ட முறைகளை மறைமுகமாக கூட்டியும் குறைத்தும், தழுவியும், மாற்றியும் எழுதி வருகின்றார்கள். இந்த முறை கள் இன்னாருடைய புத்தகத்திலிருந்து ஆதாரமாக காட்டப் பட்டது என்று பகிரங்கமாக ஒரு சிறு குறிப்பு எழுதி இருக்கலாம். அல்லது இவை களுக்கு எது ஆதாரம் என்று காட்டி எழுதலாம். பிரண்டை உப்பு சோற்றுக் கற்றாழை, செம்பரத்தை, போன்றவைகளில் இருந்துதான் ராணி பத்திரிகை காப்பி அடிக்கிறது என்பதை நம்நாட்டு மூலிகைகளைத் தொடர்ந்த எம்போன்ற வாசகர்கள் நன்கறிவார்கள். மற்ற பத்திரிகை கள் கூட சில சமயம் உங்கள் மருத்துவப் பொன்மொழிகளை வெளியிட்டு வருகின்றன. (குமுதம், ஆனந்தவிகடன் போன்ற பிரபல வார ஏடுகள்) அதனடியில் ஆதாரம் தங்கள் பெயரைப் போட்டு, நம்நாட்டு மூலிகைகள் என்று பிரசுரித்து தமிழர்களின் தன்மானத்தைக் காட்டுகின்றன. பச்சைத் தமிழன், நாம் தமிழர் என்று பேசிக் கொள்ளுகின்ற ராணி போன்ற பத்திரிகைகளுக்குத் தன்மானம் இருக்கிறதா என்று எண்ண வேண்டி இருக்கிறது. முன்னெல்லாம் ராணியில் "பாட்டிவைத்தியம்" பகுதியில் ஒருபொக்கைவாய்ப் பாட்டி கால் நீட்டிக் கொண்டு பதில் கூறுவாள். அது இப்போது மறைந்துவிட்டது. ஒரு புறம் மூலிகையும் ஒரு புறம் கல்வமும் குழவியும் போட்டு மக்களை ஏய்க்கப் பார்க்கிறது. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா ? அது போல பத்திரிகை உல கில் ராணிப் பத்திரிகை லட்சம் பிரதிகள் விற்றாலும், மூலிகைமணி போல் பரம்பரை வழி மருத்தவப் பத்திரிகையாகாது, தாங்களும் இதைப் பார்த்துக் கொண்டு எப்படியாவது யார் பெயரிலாவது தமிழர்வைத்தியம் மக்களிடையே பரவினால் போதும் என்று இருப்பது மிகமிகப் போற்றி

மகிழ வேண்டிய காரியமாகும். வாழ்க உங்கள் தொண்டு, சிறக்க உமது பணி, என்று எங்கள் மனமார வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்,
காமராசர் படிப்பகம்,
சா. மாணிக்கவேல். இ. தர்மராசன்
ஆவுடையப்பன். க. வே. சீதாராமன்
த. நாகசாமி.
சவண்டப்பட்டி. ( கரூர் வட்டம் )

30—12—65

தி இண்டஸ்ட்ரியல் லேபர் வெல்பேர்
அசோசியேஷன் லிமிட்டெட்.
அவினசி ரோட், கோயமுத்தூர். (தலைவர். திரு. ஜி. டி. நாயுடு.)
அன்புள்ள ஐயா,

வந்தனம். தாங்கள் கடந்த ஆண்டு மூலிகை மணி பழைய பிரதிகள் காலிகோ பைண்டு செய்யப்பட்டது கைக்குகிடைத்தது அது மிகவும் பயனுள்ளதாகவும் மிக அழகாக பைண்டு செய்யப்பட்டும் உள்ளது. உங்கள் சீரிய முயற்சியும் நல்ல தொண்டும் வாழ்க என்று வாழ்த்துகிறோம்,

இங்ஙனம்,
பி. கண்ணன், அலுவலர்.

23—12—65

பம்பாய்.

மகாகனம் தங்கிய சித்தர். ஏ. ஆர். கண்ணப்பர் அவர்களுக்கு அடியேனின் இதய வணக்கங்கள். தங்கள் மூலிகை மணியை அண்மையில் காணும் பாக்கியம் பெற்றேன். தமிழ் பத்திரிகை உலகம் என்ற சேற்றில் முளைத்த செந்தாமரை போல் திகழ்கிறது மூலிகைமணி. கையில் எடுக்கும்போதே ஓர் தெய்வ இன்ப நுகர்ச்சி. விளம்பரமும், ஆபாச சினிமா விமர்சனங்களும், புகைப்படங்களும் இல்லாத பத்திரிகை. இங்கிலிஷ் மருத்துவ சிகிச்சைக்கு சாட்டையடி கொடுத்து, பண்டையமணம் வீசுவதும், பக்கத்திற்குப் பக்கம் பயனுள்ள விஷயமும், தமிழகத்துக்கே பெருமை தரத் தக்கது. "மூலிகைமணி" மல்லிகை, முல்லைக்கொடிபோல படர்ந்து உலகமெல்லாம் ஓடி, தமிழ்மணம் கமழட்டும்! சித்தர் வைத்தியம் புகழ் ஓங்கட்டும் என்று வாழ்த்திக் கடவுளை பிரார்த்தனை செய்கின்றேன்.

இங்ஙனம்
A. P. PONNUSAMY,
86. BABU GENU ROAD.
KALBADEVI
BOMBAY. 2.

சென்னை - 21. 31—12—65

நிர்வாகி மூலிகைமணி காரியாலயம்,

ஐயா, தாங்கள் வெளியிட்ட முதல் பாகம் நம்நாட்டு மூலிகைகள் கிடைக்கப் பெற்றேன்; படிக்கப்படிக்க பிரம்மானந்த சந்தோஷம். கீழே வைப்பதற்கு மனம் வரவில்லை. மூலிகைகளைப் பற்றிய எத்தனையோ பதார்த்தகுண சிந்தாமணிப் புத்தகங்களை வாசித்திருக்கிறேன். ஆனாலும் டாக்டர். கண்ணப்பர் போன்று எளிய நடையில் கதை, நாவல் படிப்பது போலவும், வாழ்க்கைக்கு பயன் படுமாறும், குழந்தைகளும் படித்து புரிந்துகொள்ளும் அளவுக்கு இதுகாறும் ஒருவர் கூட எழுதவில்லை; இனி மேல் வரப்போவதும் இல்லை. பல ஆண்டுகளாக தினமணிசுடரில் வாரந் தோறும் எழுதியதை வெகு ஆவலோடு மக்கள் வாசிப்பதையும், அந்த மூலிகைகளைப் பயன்படுத்தி நோய்களிலிருந்து (காசுபணம் செலவின்றி) விடுபடுவதையும் நான் கண்டும், கேட்டும் இருக்கிறேன். எனக்கே ஒரு சமயம் நாள்பட்ட பேதி கண்டு மிகவும் தொல்லை பட்டேன். பல ஆங்கில மருந்துகள் எடுத்தும் குணமாகவில்லை; அது சமயம் சுடரில் விளாமரத்தின் உபயோகம் பற்றி எழுதியிருந்தது, அதில் பேதி நிற்கும் முறை ஒன்று குறிப்பிட்டதைப் பார்த்து அதன்படி செய்தேன். என்ன ஆச்சரியம்! மறுநாள் முதல் பேதி சொல்லாமல் நின்று போனது. டாக்டர். கண்ணப்பர் அவர்களை ஒரு தெய்வாம்சமாக கருதுகிறேன். இது தற்புகழ்ச்சி அல்ல. முருகர் அறிய நான் சொல்வதற்கு திடமாயிருக்கிறேன், இனிமையான கட்டுரைகள். நம்நாட்டு மூலிகைகள், இனி மூலிகைமணியிலேயே தொடர்வது பழம் நழுவி பாலில் விழுந்தது போல் ஆனது. மூலிகைமணி ஆல்போல் தழைக்க வேண்டிக் கொள்கிறேன்.

வணக்கம்,

18. குவெப்பச் செட்டித்தெரு, — ஏ. சேஷாசல முதலியார்,

பழையவண்ணாரப் பேட்டை, சென்னை. — ரெவின்யூ இன்ஸ்பெக்டர்.

பூலாம்பட்டி. 21—12—65

மக்களுக்கோர் மூலிகையாக விளங்கும் ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம். நாங்கள் மூலிகைமணியை படிக்கும் போதெல்லாம், சித்தர்களின் கூட்டத்தில் இருப்பது போன்ற உணர்ச்சி, தங்கள் ஆராய்ச்சித் திறனில் ஓர் வியப்பு, மறைக்காமல் மூலிகைகளின் பயன்களை, முறைகளை விளக்கி இருப்பதில் எல்லையற்ற மகிழ்ச்சி. சித்தவைத்தியம் புத்துயிர் பெறுமென்ற நம்பிக்கை. தினமணி சுடரில் தாங்கள் எழுதி வந்த நம் நாட்டு மூலிகைகள் கட்டுரைகளைப் படித்து வைத்தியரானவர்கள் அனேகம். சொந்தமாக தன் வீட்டுவரையில் உபயோகித்து சுகமனுபவிப்பவர்கள் அனேகர். இதுமாதிரி எமது சங்கத்திலேயே பலர் உள்ளனர். தங்கள் பணி போற்றுதற்குரியது. ஆண்டவர் பேரருள் தங்களுக்கு

# நவக்கேரள்களின் முன்னறிக்கை

சோதிட வித்வான். எம். எஸ். வைத்தியலிங்கம்.

விசுவாவசுஹூ தைமீ

(14—1—66 முதல் 11—2—66 வரையில்)

மேஷம்- சரீர சௌக்கியமும் வியாபார மேன்மையும் தனப்பிராப்தியும் களத்திர புத்திர சந்தோஷமும் குடும்பத்தில் சுப செலவினங்களும் விவசாயிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பிரபு சன்மானங்களும் நண்பர்களால் சகாயமும் சத்துருக்கள் நாசமும் கௌரவமும் உண்டாகும்.

ரிஷபம்- இம்மாதம் அலைச்சல் திரிச்சலும் தன விரயமும் கட்டுக்கடங்காத செலவினங்களும் காரிய தாமதமும் ஏற்ற மளிக்கிறது, ஒரு சிலருக்கு சொல்ப சரீர பீடையும் வெளியூர் பிரயாணங்களும் இடமாறுதலும் நிகழக்கூடும்.

மிதுனம்- இந்த நண்பர்களுக்கு இம்மாதம் கூட அவ்வளவு நன்மையாக தோற்றமளிக்கவில்லை, பயனற்ற செலவினங்களும் குணமற்ற நண்பர்களும் தேவையற்ற விருந்தினரும் ஏற்படக்கூடும். சிலருக்கு தன நஷ்டமும் காரிய ஹானியும் செல்ப விரோதங்களும் நிகழக்கூடும், சிலருக்கு சரீர பீடையும் மனோ விசாரமும் வெளியூர் பிரயாணங்களும் உடன் சாந்தியும் உண்டாகும்.

---

முன்னின்று நீண்டகாலம் வாழ்ந்து மேன்மேலும் மக்களுக்கு நல்ல தொண்டுகளை செய்துவர பிரார்த்திக்கிறேன்.

ஜீவகாருண்யசங்கம். ஏ. கமாலுத்தின்

பூலாம்பட்டி போஸ்ட்டு, பெரமலூர் தாலுக்கா,

திருச்சி ஜில்லா.

போத்தனூர். 11—12—65.

அல்லாவின் தயவால் பிறந்து வளர்ந்த ஐயாவுக்கு சலாம். உங்கள் வைத்திய முறைகளை நான் மிகவும் நேசிக்கிறேன். ஏனென்றால், அவை டாக்டரிடம் சென்று சலாம் போட்டு ஊசியைக் குத்திக்கொள்ளச் சொல்லவில்லை! இயற்கையிலேயே எங்கும் எளிதாகக்கிடைச்கும் பச்சிலைகளிடம் சென்று சலாம் போடச் சொல்லுகிறது. பச்சிலைகளுக்கு பச்சாதாபம் இருப்பது போல மனிதனுக்கு இல்லை என்பதை உங்கள் வாசகங்கள் எடுத்துரைக்கின்றன. வாழ்க "நம்நாட்டு மூலிகைகள்" மூலிகைமணி! என்று வாழ்த்து தெரிவிக்கிறேன். சலாம்.

ஏ. ஆர். மகம்மது கவுஸ்

5-226. மில்ரோடு,

போத்தனூர். (கோவை ஜில்லா)

கடகம்- இம்மாதம் குருதேவர் லாபஸ்தானத்தில் நின்றமையால் சென்ற மாதங்களைவிட இம்மாதம் சரீர சௌக்கியமும் இஷ்டான்ன போஜனமும் போதுமான அளவுக்கு தனசகாயமும் விவகாரங்களில் ஜயமுண்டு.

சிம்மம்- இம்மாதம் செய்யும் தொழிலில் அனுகூலமும் நூதன தொழிலில் நோக்கமும் பூமிசம்மந்தமான பலிதமும் பந்து ஜன சேர்க்கையும் நண்பர்களால் அனுகூலமும் விவாகாதி சுபநிகழ்ச்சிகளும் சிலருக்கு காரிய தாமதமும் களத்திர புத்திரர்களுக்கு ரோகபீடையும் உடன் சாந்தியும் சொல்ப தன முடக்கமும் வெளியூர் பிரயாணங்களும் உண்டாகும்.

கன்னி- இம்மாதம் குருதேவர் பாக்யஸ்தானத்தில் நின்று நடத்துவதால் பெரிய மனிதர்கள் சேர்க்கையும் தனப்பிராப்தியும் செய்யுந் தொழிலில் அனுகூலமும் உத்தியோக மேன்மையும் நூதன வியாபாரத்தில் நோக்கமும் காரிய சாதகமும் விவகாரங்களில் வெற்றியும் சத்கீர்தியும் தர்ம சிந்தனையும் உண்டாகும்.

துலாம்- காரிய தாமதமும் பணமுடக்கமும் சாமாளிக்க முடியாத செலவினங்களும் வரி வம்புகளும் சமாளிக்க வேண்டிவரும். மேலும் சிலருக்கு இடம் மாறுதலும் நம்பி ஏமாற்றமடைவதும் நேரிடக் கூடும். சிலருக்கு நோய் உபாதையும் மக்களால் தொந்திரவும் மனஸ்தாபமும் வரலாம் என்று தோன்றுகிறது. உஷார் நலம் தரும்.

விருச்சிகம்- குருதேவர் மட்டும் சாமாளிக்கும் தன்மை அளிப்பார். பயனற்ற பிரயாணங்களும் குணமற்ற விவகாரங்களும் சுகமற்ற உணவுகளும் இவைபோன்றவை சமாளிக்க வேண்டிவரும். முன்எச்சரிக்கையுடன் நடப்பது நலம். சிலருக்கு டாக்டர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

தனுர்- இம்மாதம் சற்றேரக் குறைய நற்பலன்களையே தரும் என்று தோற்றமளிக்கிறது. பழைய முயற்சிகளில் வெற்றிகரமும் காரிய சாதகமும் பந்துஜன சேர்க்கையும் தெய்வப் பிரார்த்தனையும் சமாளிக்கக்கூடிய செலவினங்களும், சிலருக்கு கோர்ட்டு விவகாராதிகளும் வரிவம்புகளிலும் கொடுக்கல் வாங்கல்களில் சிக்கல்களும் நீங்கிப் போகும்.

மகரம்- இம்மாதம் சுகதுக்கமிரண்டும் சமமாகவே நடைபெறும். குடும்பச் செலவு கட்டுக்கு மீறி நடைபெறுதலும் வியாபார மந்தமும் சிநேகிதரை நம்பி மோசம் போவதும் இவைபோன்ற பிரதிகூல பலன்களும் சிலருக்கு பிரபுக்கள் சன்மான்மும் பந்துஜன சேர்க்கையும் சுபசெலவுகளும் அலைச்சல் திரிச்சலும் புத்திரர்களால் அனுகூலமும் உண்டாகும்

கும்பம்- இம்மாதம் குடும்பச் செலவினங்களால் தொல்லையும் போதுமான அளவிற்கே தனசகாயம் ஏற்படுவதும் கஷ்டமும் சினேகிதர்களால் நன்மையும் அகால போஜனமும் தொழில் மாற்றமும் அல்லது இடமாற்றமும் முயற்சிக்கும் காரியங்களில் தாமதமும் சிலருக்கு வாக்கு நாணயம் தவறுதலும் நிகழக்கூடும். முன்எச்சரிக்கை நல்லது,

மீனம்- இம்மாதம் கூட தொல்லைகள் விட்டபாடில்லை. செலவினங்களும் பணமுடக்கமும் நிறுத்த முடியாத பிரயாணங்களும் ருணரோகசத்துருக்கள் பீடையும் ஒரு சிலரால் சொல்ப அனுகூலமும் விவகாரங்களில் அபஜெயமும் வரி வம்புகளால் தொல்லையும் சரீர மெலிவும் அகால போஜனமும் உண்டாகும்.

---

மூலிகைமணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவரும், ஆசிரியரும் ஆ. இரா கண்ணப்பர், 33/1, தென்னமரம் தெரு. வேலூர். (வ. ஆ.)